பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 181 வைகாசி 14ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 28 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk



## மன்னாரில் திடீர் சோதனை 126 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், மே 28
மன்னார், உதயபுரத்தில் நேற்று முன்தினம் 126 கிலோ கஞ்சா மீட் 21

## சாவகச்சேரியில் நேற்று இரவு நடந்த விபத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 28
சாவகச்சேரியில் நேற்று இரவு நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந் தார். 04

# அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படாது

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மே 28
இலங்கையின் பாதுகாப்பு நிலமைகள் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சதவீதம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன என்று குறிப் பிட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவசரகாலச் சட் டத்தை மீண்டும் நீடிக்க வேண்டிய தேவை ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார். 21

## வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு ”பனை நிதியம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 28
வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபி விருத்திக்கான "பனை நிதியம்" நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்வாதா ரம், மீள்குடியமர்வு, விவசாயம், உட்கட் டுமானம் ஆகியனவற்றின் மேம்பாட் டைக் கருத்தில் கொண்டு இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற் காக 5 ஆயிரம் மில்லியன் 21

## குருநாகல் மருத்துவருக்கு எதிராக முறைப்பாடுகள்

### விசாரணை மேற்கொள்வதற்கு சிறப்பு விசாரணைக் குழு

கொழும்பு, மே 28
குருநாகல் மருத்துவமனையின் மகப்பேற்றுப் பிரிவில் பணியாற்றிய மருத்துவர் ஒருவர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை மேற் கொள்வதற்காக சிறப்பு விசாரணைக் குழு ஒன்று 21

## 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார் ரணில்

யாழ்ப்பாணம், மே 28
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வர வுள்ளார் என்று மாவட்டச்செய லகத் தகவல்கள் தெரிவித்தன. இந்த ஆண்டுக்கான புதிய சமுர்த்திப் பயனாளிக ளுக்கு உறுதிப்படுத் 04

## தமிழர்களை இனியும் ஏமாற்றாது வாக்குறுதிகளை நிறைவேற்றுக!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமை அமைச்சரிடம் வலியுறுத்து



21

## 22,000 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள்

### தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 28
22 ஆயிரம் பட்டதாரிகள் அரச சேவைக் குள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன என்று தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற "பனை நிதியம்" ஆரம்ப நிகழ்வில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது எமது அரசின் கீழ் 22 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவை 21

## உல்லாச பயணிகளுக்கு காப்புறுதி

கொழும்பு, மே 28
நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்காகப் புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தேசிய காப்புறுதி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு சுற்றுலாப் பயணிக்கு 100 மில்லியன் ரூபா காப்புறுதி வழங்கும் 21

## புலிகள் மீதான தடை சரியா? உறுதிப்படுத்துவதற்குக் குழு

சென்னை, மே 28
இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீடித்தமை சரியானதா என்பதை உறுதிப் படுத்துவதற்காகக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின்பேரில் இந் தக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.
புதுடில்லி உயர் நீதிமன்றின் 21

## சமூக வலைத் தளங்களில் அவதானமாக செயற்படுக

### பொலிஸார் அறிவுறுத்தல்

கொழும்பு, மே 28
சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்தும்போது அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் 21

## தாக்குதலில் பாதிப்புற்றோருக்கு ரூ. 149 மில்லியன் இழப்பீடு

கொழும்பு, மே 28
கடந்த மாதம் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்க ரவாதத் தாக்குதலில் உயிரி ழந்தவர்கள் மற்றும் காயம டைந்தவர்களுக்கு இதுவ ரையில் 149 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட் டுள்ளது என்று இழப்பீட்டுக் கான அலுவலகம் தெரிவித்துள்ளது. 21

## ஞானசாரர் விடுவிக்கப்பட்டமை ஒருதலைப்பட்சமான தீர்மானம்

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, மே 28
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரருக்கு அரச தலைவர் பொது மன்னிப்பு வழங்கி விடுவிப்பு செய்துள்ளமை ஒருதலைப்பட்சமானது என்று லங்கா சமாசக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: 21

## நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் பிக்கு பொருத்திய கமராவை அகற்றுக

### முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவு அவமதிப்பு வழக்கு பாயும் எனவும் எச்சரிக்கை

முல்லைத்தீவு, மே 28
முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பௌத்த பிக்குவால் அடாத் தாகப் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கண்காணிப் புக் கமராக்களை உடனடி யாக அகற்ற வேண்டும் என்று முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரிக்கு உத்தரவிட்டுள் ளது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்.
நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தின் சார் பில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன் றத்தில் தாக்கல் 21

# மணிவிழா வாழ்த்து



கந்தையா
பரமேஸ்வரன்
(கிராம அலுவலர் J/17 - வேலணை தெற்கு)
அவர்கள் இன்று மணிவிழாக் காண்கின்றார். இவர் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :
வேலணை தெற்கு கமக்காரர் அமைப்பு.
6ஆம் வட்டாரம், வேலணை.

(CS 25650) (14.17)



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவனும் நிர்வாக சபை உறுப்பினரும் நலன்விரும்பியுமான
க.மயில்வாகனம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி சாந்தகுமாரி மயில்வாகனம்
அவர்கள் 26.05.2019 இறைபதமடைந்தார் என்றசெய்தி கேட்டு பாடசாலை சமூகம் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளது. இத்துயரில் நாமும் பங்குபற்றுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/நாவற்குளி மகா வித்தியாலயம்.

(N 10308) (14.17)



" ஸ்கந்தா அன்னையின் "

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
புகழ்பூத்த முன்னைநாள் அதிபர்
அமரர் க.சிவாஜி
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.

கல்விசார் கல்விசாரா உத்தியோகத்தர்கள்
மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திக்குழு,
பழைய மாணவர்சங்கம்.

(CS 25581) (14.17)


# பொன் மொழிகள்

- எளிமையும் தூய்மையும் ஒருவனை உயர்ந்த மனிதனாக உயர்த்துகின்றன.
- அன்பைப் பகிர்ந்து கொள்வது வாழ்க்கையில் மிகப் பெரிய சந்தோசம்.
- சிறப்பான வழியைத் தேர்வு செய்யுங்கள். அது நீங்கள் பெற விரும்பியதைப் பெற்றுத் தரும்.
- பாமர மக்களின் நிலையே ஒரு சமுதாயத்தின் உண்மை நிலையாகும்.
- உதவியின் மதிப்பு என்பது உதவுகின்றவன் மதிப்பளவே ஆகும்.
- அநீதியானது மனிதர்களிடையே சச்சரவுகளை விளைவிக்கிறது. நீதியோ தோழமையை வளர்க்கிறது.
- அறிவுள்ளவன் தன் செல்வத்தை மூளையில் வைத்திருக்க வேண்டும். தன் இதயத்தில் வைத்திருக்கக் கூடாது.
- உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால் யாருக்காகவும் காத்திருக்காதீர்கள். நேரத்தை வீணாக்காதீர்கள்.
- சட்டங்கள் ஏழைகளைக் கசக்கிப் பிழிகின்றன. பணக்காரர்களே சட்டத்தை ஆட்சி செய்கின்றனர்.
- அறிவாளிகள் பணத்துக்கு அடிமையாக இருப்பதால் தம் அறிவை விலை கூறுகின்றனர்.
- வேதனையைச் சகித்துக் கொண்டவனே எப்போதும் வெற்றி பெறுவான்.
- ஒருவனிடம் அச்சம் கொண்டால், அவனிடம் அன்பு கொள்ள முடியாது.
- ஒருவனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பது அவனைப் பழிப்பது போலாகும்.


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான
திருமதி மதுமதி தீபன்திலீசன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
சாந்தகுமாரி மயில்வாகனம்
25.05.2019 இறைபதம் எய்தினார். அவர்களின் மறைவு குறித்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் :
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/புனித சாள்ஸ் ம.வி

(CS 25648) (14.17)



# 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 29.04.2019 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு
அமரர்
பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (29.05.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

திதி: தசமி



அன்னை மடியில்
16.05.1994

இறைவன் அடியில்
27.04.2019

121/44 சோலைபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 386 8675


# விடுகதைகள்

1) வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன ?
2) ஓயாமல் இரையும் இயந்திர மல்ல. உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன ?
3) மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல, பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல அவன் யார் ?
4) வீட்டிலிருப்பான் காவலாளி. வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி அவர்கள் யார்?
5) எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது. அது என்ன ?
6) உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன ?
7) மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார் ?
8) யாரும்செய்யாத கதவுதானே திறக்கும் தானே மூடும் அது என்ன ?
9) அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார் ?
10) வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார் ?



# விடைகள்

1.செருப்பு
2. கடல்
3. அணில்
4. பூட்டும் சாவியும்
5. மின்விசிறி
6. பாய்
7. காளான்
8. கண் இமை
9. காயம்
10 ஆறு



## மகுடிக்கு வழிகாட்டுவோம்



சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3188 திகதி: 2019.05.27 திங்கட்கிழமை
13 14 17 28 G 39
44,065,320/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 621
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.05.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,674,550/-
வெற்றி இலக்கங்கள்
07 39 56 68 F

# டி.எஸ்.சேனநாயக்கா



டி.எஸ்.சேனநாயக்கா இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சர். 1884ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி பிறந்த பௌத்தரான இவர் கொழும்பு புனித தோமையார் கல்லூரியில் பயின்றவர். பின்னர் சிறிது காலம் நில அளவைத் திணைக்களத்தில் எழுதுநராகப் பணியாற்றினார். அதன் பின் தனது தந்தையாருக்குச் சொந்தமான இறப்பர்த் தோட்டத்தைக் கவனித்தார்.

1929இல் இலங்கை சட்டவாக்கப் பேரவையில் ஓர் உறுப்பினரானார். 1931இல் அரச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை காணி அமைச்சரானார். வேளாண் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார். 1946இல் பிரித்தானியரால் வழங்கப்பட்ட சேர் பட்டத்தை மறுத்தார். எனினும் பிரித்தானியருடன் நல்லுறவை வளர்க்க விரும்பினார். 1947இல் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சரானார். 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4இல் பிரித்தானிய ஆதிக்கம் முடிவுற்றதும் முழு இலங்கையையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றார். கல்லோயாத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். குதிரைச் சவாரி ஒன்றின்போது குதிரையில் இருந்து காயமடைந்த அவர் 1952ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி இறந்தார். இவருக்குப் பின் இவரது மகன் டட்லி சேனாநாயக்கா இலங்கையின் தலைமை அமைச்சரானார்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1572 சீட்டிழுப்பு திகதி 27.05.2019
வெற்றி இலக்கங்கள்
29 54 58 64 S
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.31, 550, 540/=

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 447 சீட்டிழுப்பு திகதி: 2019.05.26
வர்ணம்: பச்சை ஞாயிற்றுக்கிழமை
O 18 46 69 70
அடுத்த ஜக்பொட் ரூ. 125,486,693/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 977
சீட்டிழுப்பு திகதி 2019.05.26 ஞாயிற்றுக்கிழமை
D 30 35 39 52
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


www.pabcbank.com
(011) 4 667 222
pabcbank
Pan Asia Bank
PanAsiaBank
22 கரட்டிற்கு
50000
தங்கத்தின் பலம்
பான் ஏஷியா
பொன்
LOAN
தங்கப் பவுணுக்கு
அதிகூடிய பணம், குறைந்த வட்டி
3 மாதங்களில் மீள்செலுத்தலாம்
(011) 4 667 222
*நிபந்தனைகள் உண்டு
பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணபடுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்கு 13.06.2019ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**1) பதவி: பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)**
சம்பள குறி இல:101/05
சம்பள அளவுத்திட்டம்: 04/2018 இன்படி 20480-310X10-345X10-27030

***அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :***

(அ) கூட்டுறவு ஊழியர் 06 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 07 வது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டத்திலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 08 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமைமட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவம் கட்டாயமாகும்/க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சை யில் 03 பாடங்களுடனான சித்தியுடன். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

குறிப்பு: விசேடமாக மொழித்தகைமை உள்ளவர்களுக்கும் கணினி அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**2) பதவி: தொழிலாளர் (நிரந்தரம்)**
சம்பள குறி இல: 318/17
சம்பள அளவுத்திட்டம்: 04/2018 இன்படி 14725-115x10-130x10-17175
வெற்றிட எண்ணிக்கை: 04

*அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:*

05ம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

மேற்படி சம்பளத்திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேட படி, வாழ்க்கைச்செலவுப்படி போன்றன சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

### பொதுவான நியந்தனைகள்:

1. வயது 13.06.2019 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. நியமனத்தின் போது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங் களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
5. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையான தெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**27.05.2019** **தலைவர்**

## 2 ஆம் திகதி....

தல் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் அவர் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சுமார் 4 ஆயிரம் பேர் இந்த ஆண்டு புதிதாகச் சமுர்த்தித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்த நிகழ்வு முத்தவெளியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்ப்பாணம் வரும் தலைமை அமைச்சருடன், சமூக வலுவூட்டல் அமைச்சார் தயா கமகேயும் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-7)

## சாவகச்சேரியில்

நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக இரவு 9.40 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. டிப்பர் வாகனமும், உந்துருளியும் விபத்துக்குள்ளாகியுள்ளன. இவை இரண்டும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மீசாலை தெற்கைச் சேர்ந்த சுரேந்திரகுமார் (வயது-45) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
மீசாலை தெற்கைச் சேர்ந்த க.உதயன் (வயது-35) படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
டிப்பர் வாகனச் சாரதி சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ - 159)

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 08 . 01 . 1971



உதிர்வு 25 . 05 . 2019

### திருமதி விக்னேஸ்வரி (ரஞ்சினி) சத்தியமூர்த்தி

யாழ். இணுவிலைப்பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தீருமதி விக்னேஸ்வரி சத்தியமூர்த்தி கடந்த 25.05.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கண்மணிஅம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மற்றும் ஞானபூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சத்தியமூர்த்தியின் (சத்தியா) அன்பு மனைவியும் சிந்து, கீதன், தெய்வீகன் ஆகியோரின் அன்புத்தாயாரும் நாகராஜா, தெட்சணாமூர்த்தி, இராஜேஸ்வரன் , விக்கினேஸ்வரன், ஞானேதஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2019) புதன் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிரான்சில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**சத்தியமூர்த்தி (சத்தியா): +3369 5888170**

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 20 . 08 . 1929



இறப்பு 25 . 05 . 2019

### இராதா நகுலாம்பிகை


கலட்டி லேன் கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராதா நகுலாம்பிகை கடந்த 25.05.2019 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**075 729 0652** **தகவல் : மகன் –காளிதாசன்**

### நாகரத்தினம் திருச்செல்வம்

**(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்)**



பிறப்பு 03.05.1950 இறப்பு 27.05.2019

உடுவிலைப்பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம்திருச்செல்வம் (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்) நேற்று (27.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் செல்வதி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும் பிரதீபரா (Director Rampara Institute (PVT Ltd), இளங்கீதன் (Quality Control Inspector, Qatar) ஹமீலா (கனிஸ்ட நிலை உத்தியோகத்தர் இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகன்யா, வைதேகி (முகாமைத்துவ உதவியாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிருத்விகாவின் பாசமிகு பேரனும் மகேஸ்வரி காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் குணேஸ்வரி, தவராசா (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்), ஜெயராசா ஆகியோரின் சகோதரனும் ஜெயரட்ணம் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் அருளானந்தம், பத்மநாதன், பவளமலர், ருக்மணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2019) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தவராசா (கட்டட ஒப்பந்தகாரர்)**
**076 2917739**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 593 6343, 021 221 7852**

அன்னை மடியில் 30 . 11 . 1941



இறைவன் அடியில் 27 . 05 . 2019

### திருமதி இராஜமலர் பத்மநாதன்

**(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)**

பண்ணாகத்தைப்பிறப்பிடமாகவும் பெர்னாந்தி .வீதி, வெள்ளவத்தை கொழும்பில் நீண்டகாலம் வசித்தவரும் இறுதியில் திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி இராஜமலர் பத்மநாதன் (ஓய்வுபெற்ற நெ்சவு ஆசிரியர்) நேற்று (27.05.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான எதிர்மன்னசிங்கம், அற்புதமலர், கிருஷ்ணமூர்த்தி மற்றும் இராஜேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சத்தியபாமா, பிரபாகரன், பிரியா, சுதாகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் தனேஸ்குமார், சிதம்பரேசன், சஞ்ஜீவா ஆகியோரின் அன்பு மாமியாரும்தமிழ்மதி, பாவலன், கைரதி, ஹரேஷ், கிஷோர், தேஷகி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கண்ணீர் அஞ்சலிக்காக அவர் பிறந்த கிராமமாகிய பண்ணாகத்தில் இன்று 28.05.2019 பி.ப 3.00 மணிவரை வைக்கப்படும் பின்னர் இல.15 கலாசாலை வீதி திருநெல்வேலியிலுள்ள அவரின் மூத்த மகளின்(சத்தியபாமா) இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (29.05.2019) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காகத் திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 15 கலாசாலை, திருநெல்வேலி**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 776 8123**



# சௌள உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வ மங்களகரமான விகாரி வருஷம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் (29.05.2019) புதன்கிழமை தசமி திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 9-17 மணிமுதல் 11 - 12 மணிவரையுள்ள கடக லக்ன சுப முகூர்த்தவேளையில்

| கொக்குவில் சிவப்பிரம்மஸ்ரீ | மல்லாகம் சிவப்பிரம்மஸ்ரீ |
|---|---|
| சொ.இரத்தினசபாபதி குருக்கள் | ந.சுந்தரேஸ்வரக் குருக்கள் |
| சம்பூர்ணவல்லி | லலிதாம்பிகை |
| தம்பதிகளின் | தம்பதிகளின் |
| பௌத்திரனும் | தௌஹித்திரனும் |



எமது சீமந்த புத்திரனுமாகிய
**சிரஞ்ஜீவி பிரணவித்ய சர்மாவிற்கு**

யக்ஞோப வீத தாரண பிரம்மோபதேச வைபவம் நடைபெற அருள்மிகு வண்ணை வைத்தீஸ்வர பெருமானினதும், மஞ்சவனப்பதி முருகனதும் திருவருளுடனும், காஞ்சிப்பெரியாரின் அனுக்கிரகத்துடனும் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் வருகை தந்து எமது குமாரனை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

உபநயன குரு :- சிவஞான பாஸ்கரன் பிரம்மஸ்ரீ தா.மகாதேவ குருக்கள்
தர்மசாஸ்தா குருகுல அதிபர் (இணுவில்)
வைதீக கிரிஜாஜோதி பிரம்மஸ்ரீ ம.தானுநாதக் குருக்கள் (இணுவில்)

தங்கள் நல்வரவை நாடும்
பிரதமகுரு யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
சிவப்பிரம்மஸ்ரீ.சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள்
ரதீபா தம்பதிகள்.
வி.பூர்வஜா, வி.பிருத்விஜா

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
077 714 9440

---

THE HALO TRUST

## கண்ணிவெடி அகற்றுனர்களுக்கான பதவிவெற்றிடம்

ஹேலோ ட்றஸ்ற் ஆனதுஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு- உலகளாவிய ரீதியில் 23 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண்.பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும். தேக வலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான- அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு :** எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக் கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்ப தாரிகளாகவே கருதப்படுவர்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள்- தங்கள் சுயவிவரக் கோவைகளை எதிர்வரும் 03ஆம் திகதி ஆனி மாதம் 2019. திங்கட்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும்.

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

(CS/25651)(11,17)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**மகேந்திரராஜா உதயகுமார்** (வசந்தன்)

கடந்த 16.04.2019 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் 28.05.2019 செவ்வாய்க்கிழமை அதிகாலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 30.05.2019 வியாழக்கிழமை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இடம்பெறுவதால் உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தோற்றம் 06.03.1969 மறைவு 16.04.2019

**தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

GPS விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு

குடும்பத்தினர்
077 159 5326, 077 791 7753

---

## கண்ணீர்க் காணிக்கை



சயன்ஸ் அக்கடமியின் உரிமையாளர்
திருமதி வசந்தினி புவனேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையாரும்
**சரா. புவனேஸ்வரன்**
அவர்களின் மாமனாருமாகிய
**தம்பிஜயா பத்மநாதன்**

தோற்றம் 28.10.1940 மறைவு 27.05.2019

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தின ரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை.**

(IN 10309)(4.17)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா நடராஜா



வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.89A காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணையில் வசித்தவரும், தற்போது இல. 20C, அசரப்பா வீதி, நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நடராஜா 26.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, துரைச்சாமி, இலட்சுமி மற்றும் சௌந்தரநாயகி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜவேல் (நோர்வே), நாகலட்சுமி, சக்திவேல், கனகலட்சுமி, விஜயலட்சுமி, சத்தியலட்சுமி, பாக்கியலட்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற நிதிவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வதி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, செல்வராணி, காலஞ்சென்ற இராஜநாயகம் மற்றும் யோகராஜா, யோகராஜா, ஞானகணேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கலா, ரவி, சுரேஸ், அமுதா, சுஜி, அசோக், விஜி, பிரதீப், கவி, முகுந்தன், சாந்தி, சுரேஸ், ராஜி, கிருபா, தீபா, யோகா, வசந், சுதர்சினி, அனுஷியா, ரகுராம், அருள், சதீஸ், கவிதாஸ், நிரஜா ஆகியோரின் பேர்த்தியும், டிலக் ஷன், மானுஷா, அஹர்னீஷ், மிர்தனி, கபீஷ், பவீனா, டனிற்றா, டானி, டேவிட், லித்து, சுவான், ஆருதி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**இல.20C, அசரப்பா வீதி, நீர்கொழும்பு.**

(CS/25652)(11,17)


**031 490 2956**

---

## மரண அறிவித்தல்

### தம்பிஜயா பத்மநாதன்

**(ஓய்வுபெற்ற பொறியியல் பகுதி உத்தியோகத்தர், இலங்கை போக்குவரத்துச்சபை)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 01, கனகரட்ணம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பத்மநாதன் (ஓய்வுபெற்ற பொறியியல் பகுதி உத்தியோகத்தர், இலங்கை போக்குவரத்துச் சபை) நேற்றுஅதிகாலை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - பொன்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், உமாமகேஸ்வரியின் அன்புக் கணவரும், சயந்தினி (பிரான்ஸ்), வசந்தினி, நிரஞ்சினி (நோர்வே), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகநாதன், யோகராஜா மற்றும் கமலா, பத்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தவயோகராஜா மற்றும் பவானி, கலாநிதி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் திருநீலகண்டர், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற தியாகரத்தினம் மற்றும் குகரத்தினம், கமலேஸ்வரி, பத்மேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், யோகதாசன் (பிரான்ஸ்), சரா.புவனேஸ்வரன் (பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்), மோகனதாஸ் (நோர்வே), கிருஷாந்தினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், வினித்தா, நில்லி, டிலானிகா, Dr.துவாரகா, சஞ்சிகா, சஜீசன், தர்மிகா, தாரதி, கதிரவன், சதுர்வன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(IN/1.3090)(11.17)

**தகவல் : குடும்பத்தினர்.**

## University of Jaffna, Srilanka

**THE APTITUDE TEST TO FOLLOW FOUR YEAR SPECIAL DEGREE PROGRAM OF BACHELOR OF ARTS IN TRANSLATION STUDIES. (Tamil and English)**

The above examination has been rescheduled to be held on 09th June, 2019 Sunday from 2.00pm to 5.00pm at the following centres.

- New Arts Block Examination Hall of the University of Jaffna.
- Examination Hall of the Eastern University of Srilanka, Vantharumoolai, Chenkallady.

Admission Cards have already been posted to the eligible candidates to their home address. Candidates are hereby requested to bring the admission cards and National Identity Cards to prove their identity to sit for this examiantion.

Registrar,
University of Jaffna.

## பெருமையுடன் வாழ்த்துகின்றோம்




இலங்கை நிர்வாக சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப்பரீட்சை முதல் நிலையில் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவை அலுவலராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள

**இராஜரட்ணம் பரணிகரன்**

அவர்களை மனதாரப்பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் மேலும் பல பதவி உயர்வுகளைப்பெறவும் வாழ்த்துகின்றோம்.

**யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் நலன் புரிச்சங்கம்**

## வீடு வாடகைக்கு

யாழ் நகரப்பகுதியில் K.K.S வீதிக்கு அருகாமையில் 5 அறைகள், 2 வரவேற்புக்கூடம், 2 சமையலறைகள், 2 குளிப்பறைகள், 2 மலசலகூடம், வாகனங்கள் தரிப்பிடத்துடன் சகல வசதிகளுடனான வீடு ஒன்று குடும்பம் ஒன்றிற்கு அல்லது நிறுவனத்திற்கு வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு
077 860 6167, 077 680 1679

ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

**2019.05.23 வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட்ட விளம்பரமானது இரத்துச்செய்யப்பட்டு மீளவும் பிரசுரிக்கப்படுகிறது.**

பிரதம செயலாளர் பிரதம செயலாளர் செயலகம் வடக்கு மாகாணம் அவர்களின் NP/01/02/03/01/14/Va.S.T.PSK இலக்க 2019.02.07ம் திகதிய கடிதத்திற்கு அமைவாக கனரக இயந்திர இயக்குனர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக உரிய ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி 01 வருட காலத்திற்கு உரித்துடையதாகும்
2. 01 வருட காலத்துடன் இப்பதவி முடிவுறுத்தப்படும். இக்காலத்தைப் பயன்படுத்தி நிரந்தர நியமனம் கோர முடியாது.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட எந்தவொரு பிரதேசத்திலும் எந்த நேரத்திலும் கடமையாற்றக்கூடிய சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி கடந்த 5 வருடங்கள் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்திய கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முக பரீட்சை குழுவினால் நேர்முக பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முக பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ரூபா 117.00 ( N.B.T,VAT வரி உள்ளடங்கலாக) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பபடிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு "செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னராகவோ, நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது விண்ணப்பத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானது என தெரிய வரும் எந்த சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் வழங்கப்பட்டிருப்பின் நியமனம் உடனடியாக முடிவுறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் 2019.06.17ம் திகதி அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதவிகள் மற்றும் கொடுப்பனவு**

| இல | பதவிப்பெயர் | வெற்றிடம் | மாதாந்த மொத்த கொடுப்பனவு |
|---|---|---|---|
| 01 | கனரக இயந்திர இயக்குனர் (ஒப்பந்த அடிப்படை) | 01 | 32891.00 |

**தகைமைகள்**

**கனரக இயந்திர இயக்குனர் பதவி (ஒப்பந்த அடிப்படை)**

1. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இறுதி திகதியன்று அரசாங்க தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் பெறப்பட்ட சான்றிதழ் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றினால் பெறப்பட்ட தகைமைச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (தமிழ்/ சிங்களம்) மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக இரண்டு (02) பாடங்களில் திறமைச்சத்தியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து (05) பாடங்களிலாவது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
3. இலங்கை போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பாரவூர்தி செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தின் முடிவுத்திகதிக்கு குறைந்தபட்சம் 03 வருட வாகன ஓட்டுனர் அனுபவத்தினை ஆட்சேர்ப்பின் நிமித்தம் பெற்றிருத்தல் வேண்டும். (இது சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்)

** புள்ளி வழங்கல் திட்டம் விண்ணப்படிவங்களுடன் இணைத்து தங்கள் பார்வைக்கு விநியோகிக்கப்படும்.

திருமதி. சுகந்தி கிஷோர்,
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

**2019.05.23 வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட்ட விளம்பரமானது இரத்துச்செய்யப்பட்டு மீளவும் பிரசுரிக்கப்படுகிறது.**

வடமாகாண பிரதம செயலாளர் அவர்களின் NP/01/02/03/01/14/Vavu.So.Ta PSK இலக்க 2019.03.25ம் திகதிய கடிதத்திற்கு அமைவாக நூலகபரிசாரகர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர்கள் விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவாகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. விண்ணப்பதாரி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட எந்தவொரு பிரதேசத்திலும் எந்த நேரத்திலும் கடமையாற்றக்கூடிய சிறந்த தேக ஆரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி கடந்த 5 வருடங்கள் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்திய கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)
5. தொழில்நுட்பம் சார் சேவைக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயல் முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முக பரீட்சை குழுவினால் நேர்முக பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முக பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ரூபா 117.00 (N.B.T,VAT வரி உள்ளடங்கலாக) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பபடிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு "செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கு 2019.06.17ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னராகவோ, நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது விண்ணப்பத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானது என தெரிய வரும் எந்த சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் வழங்கப்பட்டிருப்பின் நியமனம் உடனடியாக முடிவுறுத்தப்படும்.

**பதவிகள் பற்றிய விடயங்கள் மற்றும் சம்பள அளவுத்திட்டம்**

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிடம் | சம்பள அளவுதிட்டம் |
|---|---|---|---|---|
| 01 | நூலக பரிசாரகர் | III | 01 | PL- 1 (2016) |

**கல்வித்தகைமைகள்**

1. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (தமிழ்/ சிங்களம்) மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக இரண்டு (02) பாடங்களில் திறமைச்சத்தியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து (05) பாடங்களிலாவது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
2. மேற்குறிப்பிட்ட நூலகபரிசாரகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமையுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 மற்றும் தரம் 9 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்**

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 க்கு அமைவான சம்பளத்.தொகுதி PL 1-2016 க்கு ஏற்ப நூலகபரிசாரகர் பதவியின் தரம் - III இற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா 24,250- 10 X 250-10 X 270- 10 X 300- 12X330 - 36,410 ஆகும்.

** புள்ளி வழங்கல் திட்டம் விண்ணப்படிவங்களுடன் இணைத்து தங்கள் பார்வைக்கு விநியோகிக்கப்படும்

திருமதி. சுகந்தி கிஷோர்,
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

## ஆதன உரிமையாளரின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, உப அலுவலகம் தெல்லிப்பளை. வட்டாரம்-10 கோட் ஒழுங்கை, ஆதன இல 36

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்குட்பட்ட கோட் ஒழுங்கையில், வட்டாரம் 10 ஆதன இல 36 இல் உள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் நவரட்ணசிங்கம் மனைவி செல்லம்மா என்னும் பெயரிலுள்ளது.

தற்போது இவ்வாதனத்தினை கனகரட்ணம் பிரதீபன் பெண் பர்மிலா என்பவர் ஆதன வரிப்பதிவேட்டில் உரிமையாளரின் பெயர் மாற்றம் தொடர்பில் விண்ணப்பித்துள்ளார்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, வலி வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை பிரதேச செயலகம், மல்லாகம் வடக்கு கிராமசேவகர் பிரிவு J/214 தெல்லிப்பளை கோவில்பற்று, தெல்லிப்பளை கிழக்கிறை "சாயுடை" நிலப்பரப்பு 07 குளி 14 (நிலப்பரப்பு ஏழும் குளி பதினான்கும்) ஆனால் 2018/03/31 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.ஆ. சண்முகநாதன் அவர்களால் அளந்து வரையப்பட்ட வரைபட இல 3539 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 01 எனக் காட்கப்பட்ட நிலப்பரப்பு 05 குளி 14.33 ஆகும்.

**கிழக்கு** - ஒழுங்கை, **வடக்கு-** பொன்னர் நல்லையாவின் ஆதனம், **மேற்கு-** குருசுமுத்து மகள் இராஜேஸ்வரிக்கும் நாகலிங்கம் நவரத்தினலிங்கத்திற்குமுரிய ஆதனம், **தெற்கு-** கயித்தார் மிக்கேல் பெண் எலிசபேத்தின் உரித்தாளருக்குரிய ஆதனம்.

மேற்குறித்த ஆதனமானது **011** இலக்க **18.04.2018** திகதிய பிரசித்த நொத்தாரிஸ் செந்தில்ராஜசர்மா லலிதாதாஸ் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்படி விண்ணப்பதாரரான கனகரட்னம் பிரதீபன் மனைவி பர்மிலா என்பவரினை வந்தடைந்துள்ளது.

மேலும் விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட 011 இலக்க உறுதியின் தாயுறுதியான 3669/27.02.2003 ஆம் இலக்க திகதிய உறுதியில் உள்ள ஆதன இடாப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

சாயுடை நிலப்பரப்பு 12 ஆனால் நில அளவையாளர் வி.மகேந்திரன் அவர்களால் 3018ம் இலக்கத்தில் தயாரித்த நில அளவைப் படத்தின் படி இது நிலப்பரப்பு 11. குளி 9.6 இதில் தெற்கு பக்கமாக நிலப்பரப்பு 05 குளி 14 உம். அதே பெயருடைய காணி நிலப்பரப்பு 04 இல் சொரியலாக ½ பங்குக்கு பதிலாக நிந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பு 02 உம் சேர்ந்து தற்போது சாயுடை **நிலப்பரப்பு 07 குளி 14.**

**3669/27.02.2003 இலக்க திகதிய உறுதியின் தாயுறுதிகள் 22/20.08.1981, 3157/26.07.2000ஆம் ஆகும். இதில்** சாயுடை நிலப்பரப்பு 12 எனும் ஆதனமானது **22/20.08.1981** திகதிய உறுதியில் நிலப்பரப்பு 09 குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அளவின் படி நிலப்பரப்பு **12** ஆக அதிகரித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

**3157/26.07.2000** ஆம் இலக்க திகதிய உறுதியில் சாயுடை நிலப்பரப்பு 04 எனும் ஆதனமானது தளையசிங்கம் தவராஜா, தளையசிங்கம் ஜெயராஜ், மற்றும் தளையசிங்கம் சிவராஜ் என்பவர்களால் தம்பையா **மகள் ரதினி** என்பவருக்கு அறுதி உறுதியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது.

3157 இலக்க உறுதியில் முற்பதிவு இலக்கம் எவையும் குறிப்பிடப்படவில்லை. இவ் உறுதியில் குறித்த ஆதனம் தளையசிங்கம் தவராஜா, தளையசிங்கம் ஜெயராஜ், மற்றும் தளையசிங்கம் சிவராஜ் ஆகியோருக்கு ஆதனம் வந்தடைந்த விதம் கீழ்குறிப்பிட்டவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவையும் விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. "ஆதனத்தில் சொரியலாக ½ வாசி எங்களினதும் அறுதி வாங்குபவரினதும் பெரிய தாயாரான அப்பாத்துரை நவரத்தினம் பெண் செல்லம்மாவிற்கு சொந்தமாகவிருந்தது என்றும் குறித்த செல்லம்மா மரண சாதனம் எதுவும் விடாமல் நிர்வாகப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான பெறுமதியான சொத்துக்களை விட்டிறக்க அவரின் பங்கு அவரின் சகோதரிகளான சுப்பையா மகள் பாக்கியம், தம்பையா பெண் நாகம்மா எங்களின் தாயார் தளையசிங்கம் பெண் தங்கம்மா ஆகிய மூவரையும் வந்தடைந்தது என்றும் குறித்த சுப்பையா மகள் பாக்கியம் திருமணம் முடிக்காமல் இறக்க அவரின் 1/6 பங்கு எங்களின் தாயாரையும் குறித்த நாகம்மாவையும் வந்தடைந்தது என்றும் குறித்த தங்கம்மா இறக்க அவரின் பங்கு எங்கள் மூவரையும் வந்தடைந்தது என்றும் குறித்த நாகம்மாவின் பங்கு அவரின் வாரிசான அறுதி வாங்குபவரை வந்தடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளது",

இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவும் ஆட்சேபனை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு குறித்த இலக்கமுடைய ஆதனத்தை பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிவடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சோ.சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்குபிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## மரண அறிவித்தல்

தோற்றம் | மறைவு



12 / 10 / 1935 — 26 / 05 / 2019

### சிவகுருநாதர் மாணிக்கவாசகர்

*(Bsc and Chartered accountant முன்னாள் கணக்காளர் - கொழும்பு, முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் - குரே லிமிட்டெட் - சம்பியா)*

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் லுசாகா, சம்பியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டிருந்த சி. மாணிக்கவாசகர் அவர்கள் 26.05.2019 ஞாயிற்றுக்கிழமையன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர், சௌந்தரியபிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களரன கணபதிப்பிள்ளை, மரகதவல்லி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக்கணவரும் சஞ்சீவ் (சம்பியா), காலஞ்சென்ற பிரதீப், பிரியங்காஷாலினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.வைகுந்தனின்(அவுஸ்திரேலியா) மாமனாரும் விஷ்ணுவின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, கமலாசனி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், வல்லிபுரநாதன், மகாதேவா, சரோஜினி மற்றும் சந்திரகுமாரி, சிவயோகசுந்தரம், மகேந்திரன், கௌரி ஆகியோரின் மைத்துனரும் திருவேணி, சாரதாதேவி, Dr. கேதீஸ்வரநாதன் ஆகியோரின் சகலையும் சியாமளா, உதயசங்கர், கமலநாதன், தர்சினி, யோகராஜ், சாயீசன், துவாரகன், லக்ஷனா ஆகியோரின் மாமனாரும், பிரசன்னா, பிருந்தா, பிரதீபா, பிரயந்தி, தாட்சாயினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் சம்பியாவில் நடைபெறும்.

**தகவல் - குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**சஞ்சீவ் (மகன்) - 00260966795922**
**ஷாலினி (மகள்) - 0061431749400**
**சுப்பிரமணியம் - 0094112508518**
**கமலாசனி - 0094763231188**
**இராஜேஸ்வரி - 0017812908782**
**கௌரி - 0094718293007**

## முள்ளம் பன்றியும் ஓநாயும்





தன் முன்னால் வந்து நின்ற ஓநாயைக் கோபமாகப் பார்த்து தன் முள்களைச சிலிர்ந்து நின்றது முள்ளம்பன்றி. ஓநாய் பதற்றத்துடன் "பயப்படாதே உன் அழகை ரசிக்கத்தான் நான் வந்தேன்" என்றது.என்னது நான் அழகா? என்று வியப்போடும் சற்று வெட்கத்தோடும் கேட்டது பன்றி. "ஆமாம் நீ கொள்ளை அழகு. உன்னைப் போல ஒரு அழகியை நான் இதுவரை பார்த்ததேயில்லை. ஆனால் உன் அழகைக் கெடுப்பதெல்லாம் உன் உடம்பில் இருக்கும் அந்த முள்ளுகள் தான்"என்றது ஓநாய்.

ஆனால் இந்த முள்ளுகள் தானே என்னைப் பாதுகாக்கின்றன"என்றது பன்றி. உண்மை தான் ஆனால் அந்த முள்ளுகளை எடுத்து விட்டாயானால் உன் அழகு இன்னும் பேரழகாகி விடும். அதற்குப் பின்னர் உன் அழகைப் பார்ப்பவர்களுக்கு உன்னைக் கொல்ல மனமே வராது" என்றது ஓநாய். ஓநாயின் பசப்பு வார்த்தையில் முள்ளம் பன்றி மிகவும் மயங்கிப் போயிற்று.

"சரி நீ இன்று போய் நாளை வந்து என் அழகைப் பார்" என்று கூறி ஓநாயை வழியனுப்பி வைத்தது. ஓநாய் போன பின்பு முள்ளம் பன்றி பலமாக யோசித்தது. தன்னுடைய முட்களை எவரின் உதவியுடன் அகற்றுவது என யோசித்தது. என் சகாக்களிடம் அகற்றி விடும்படி கேட்கலாம். ஆனால் அவர்கள் தான் மேலும் அழகாகி விடுவேனென்ற பொறாமையால் முட்களை அகற்ற விரும்பமாட்டார்கள் என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டிருக்கையில் அவ்வழியே குரங்கு ஒன்று வந்தது. அதனைத் தன்னிடத்தில் அழைத்த பன்றி "குரங்காரே! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். தாங்கள் ஆணும் பெண்ணுமாக ஒருவருக்கொருவர் நன்றாகப் பேன் பார்ப்பதில் வல்லவர்கள் என்று நான் அறிந்திருக்கிறேன் என்றது. குரங்கு ஆமாம் சரி அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்றது. எனது உடம்பிலும் நிறையப் பேன்கள் உள்ளன. பேன்களை அகற்றுவதற்கு இந்த முள்ளுகள் எனக்குத் தடையாக உள்ளன.நீர்இந்தமுள்களை அகற்றி எனது பேன் தொல்லையை நீக்க உதவ வேண்டும் என்றது பன்றி. குரங்கோ தன்னை முள்ளம்பன்றி புகழ்ந்ததில் மகிழ்ச்சியடைந்து பன்றியின் முள்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கி அகற்றத் தொடங்கியது. முள்ளம் பன்றியின் உடல் உரோமங்கள் சிலவே முள்களாக மாற்றமடைந்திருந்ததால் அவற்றைப் பிடுங்கி அகற்றுவதில் பன்றிக்கு வலி எதுவும் எற்படவில்லை. குரங்கு தன் வேலையை முடித்துக் கொண்டு பேன் பார்க்கத் தொடங்கியது. "நன்றி குரங்காரே! இன்று நீர் மிகவும் களைப்படைந்து விட்டீர். நாளை பேன் எடுப்பதை வைத்துக் கொள்வோம் எனக் கூறி தன் புதிர் நிறைந்த பொந்துக்குள் போய் மறைந்தது பன்றி.

மறுநாள் தன்னைத் தேடி வந்த ஓநாயைப் பார்த்து பன்றி "இப்போது எப்படி? நான் இன்று இன்னும் அழகாயிருக்கிறேனா?எனக் கேட்டது. மகிழ்வோடு. ஓ... அழகாய் மட்டுமல்ல அடித்துச் சாப்பிடுவதற்கு வசதியாகவும் இருக்கிறாய் என்று கூறி சிரித்தபடி பன்றி மேலே பாய்ந்தது ஓநாய்.

**வீண் புகழ்ச்சியில் மயங்கவும் கூடாது போலிகளைக் கண்டு ஏமாந்து விடவும் கூடாது.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி இராசையா

**(ஓய்வுநிலை ஆசிரியர்)**



இவ்வுலகில் 10.08.1921 — இறைவனடியில் 26.05.2019

சிங்கப்பூரைப்பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி இராசையா 26.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசையாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - கதிரம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மசோதி மற்றும் குமாரகுலசிங்கம் (ஓய்வுநிலை DOA, நீர்ப்பாசனத் திணைக்களம்), சிவஞானவல்லி (ஓய்வுநிலை ஆசிரியர், யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை), சிவஞானசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தபொன்மலர், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்சாயினி - சுதாகரன், பிரணாயினி - பிரதீபன், பிரணவன், சிந்துஜா, செல்வியா, சங்கர், சியாமளா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், பரணித், கனிஸ்கா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னாலை வீதி,**
**கட்டுடை, மானிப்பாய்.** (CS/25652)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செபஸ்ரியாம்பிள்ளை தர்சியஸ் நவரத்தினம்



பிறப்பு 12.12.1940 — இறப்பு 27.05.2019

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை தர்சியஸ்நவரத்தினம் நேற்று(27.05.2019)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிலேமினா, நீற்றா, ஜெயமணி, மரியானந்தராசா, மெனிக்கம்மா, சிங்கராசா மற்றும்நீக்கிலஸ்ஆகியோரின்அன்புச்சகோதரரும்அந்தோனியாப்பிள்ளையின் (தவம்) அன்புக்கணவரும் வினோதினி, ஜெயந்தினி, ரஞ்சினி, (பிரான்ஸ்), றோகினி, தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற டேவிட் மற்றும் றெனோட் தேவகுமார் (பிரான்ஸ்), கடம்பகுமார், அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வின்சன், டொறிஸ்ரன், டேவினா, றினோஜன், திவியா, தேனுஜா அசின்ஜா, ரக்சிகா, கஜானா, ஜீவினா, அனுஸ்கா, அனிஸ்ரன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இரங்கல் வழிபாடு இடம்பெற்று பூதவுடல் இன்று (28.05.2019) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவசிகுளம்,**
**மிருசுவில்.**

**தகவல்:குடும்பத்தினர்.**
**077 808 8403, 077 400 4762**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தீராச் சிக்கல்...!

அமைச்சர் ரிசாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள்தொடர்பானவிவகாரம் மெல்ல மெல்லத்தீவிரம் பெற்று வருகின்றது. அமைச்சர் ரிசாத், விசாரணைகளுக்கு ஒத்துழைத்து உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்றும் அப்படிச் செய்யாவிட்டால்அவருக்கு எதிரானநம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்ஆதரிப்பார்கள்என்றும் ரெலோகட்சிதீர்மானம்நிறைவேற்றியுள்ளது.

அமைச்சர் ரிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தீர்க்கமான முடிவு எதனையும் அறிவிக்காத நிலையில் ரெலோவின் முடிவு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுடன் நேரடியாக மோதல்களத்தைக் கொண்டுள்ளகட்சி ரெலோ. இருதரப்பினருக்குமே மன்னார் மாவட்டமே முதன்மையான இயங்குதளம் என்பதாலும் அமைச்சர்ரிசாத்பதியுதீனுக்கு எதிராக நீண்ட காலமாகச் சுமத்தப்பட்டுவரும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளால் அதிகம் பாதிக்கப்படும் கட்சி என்கிற வகையிலும் ரெலோவின் முடிவு ரிசாத்துக்கு எதிரானதாக அமைந்திருப்பதில் வியப்பு ஏதுமிருக்க முடியாது.

அதற்கும் மேலாக வடக்கில் கூட்டமைப்பின் ஆதரவைத் தன் பக்கம் திரட்டக்கூடிய அளவிற்கு அமைச்சர் ரிசாத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான உறவு சுமுகமானதாக இருந்ததாகவும் சொல்வதற்கு இடமில்லை. முஸ்லிம்களின் மீள்குடியமர்வு தொடர்பில் அமைச்சர் எடுத்திருக்கக்கூடிய நகர்வுகள் தமிழர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்திய தருணங்கள் கடந்தகாலங்களில் பலவுண்டு. இதனால் வெளிப்படையாக அமைச்சரை ஆதரித்து அவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கும் நிலமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடையாது.

போதாக் குறைக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் முஸ்லிம்களால் தாம் ஆக்கிரமிக்கப்படுகிறார்கள் என்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளாலும் அதிகார வர்க்கத்தினராலும் தாம் ஒதுக்கப்பட்டுத் துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் உணர்ந்து வரும் நிலையில் அமைச்சர் ரிசாத்தை ஆதரிப்பது தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குதர்மசங்கடமானதுதான்.

ஆனால், இத்தனை யதார்த்தங்களையும் தாண்டி, இன்று அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கும் கூட்டமைப்பின் தலைமை அமைச்சர் ரிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பது நடக்கக்கூடிய காரியமா என்றால் இல்லை. அத்தோடு நாடு முழுவதும் முஸ்லிம்கள்தீவிரவாதிகளாக இலக்குவைக்கப்படும் நிலையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பது இரு இனங்களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மோசமாகப் பாதிக்கும் என்கிற காரணியுடன் இருக்கின்ற நிலையில் அமைச்சர் ரிசாத்துக்கு எதிரான முடிவைக் கூட்டமைப்பு எடுக்கும் என்று எதிர்பார்ப்பது கடினமே!

எனவே கூட்டமைப்பினுள் ரெலோவின் முடிவு ஆழமான தாக்கத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் கனதியான விவாதத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும். இறுதியில் கூட்டமைப்பின் தலைமை இன்றைய ஆட்சியாளர்களைக் காப்பாற்றும் விதத்தில் எடுக்கும் தீர்மானமே முடிவாக இருக்கும்.

இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி தமிழர் முஸ்லிம்களிடையேயான முரண்பாட்டைக் களைவதற்கான உறுதியான ஓர் அடித்தளம் இடப்பட்டால் தவிர இந்த விடயத்தில் கூட்டமைப்பு எடுக்கப்போகும் எந்த வகையிலான முடிவும் அதனைப் பொறுத்தவரையில் கடுமையான தாக்கத்தைத் தருவதாகவே அமையும்.

# இலங்கைத் தமிழ்ச் சமூகம் எப்போதுதான் கரையேறும்?



மூன்று தசாப்தங்கள் உள்நாட்டுப் போரால் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளான இலங்கையில், அமைதியும் வளர்ச்சியும் திரும்பப் பத்தாண்டுகள் போதுமானதல்ல என்றாலும், இந்தப் பத்தாண்டுகளில் போரால் உருக்குலைந்த தமிழ்ச் சமூகம், எந்த அளவுக்கு மீண்டெழுந்து மேலே கரையேறி வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஏமாற்றமும் வேதனையுமே எஞ்சுகிறது.

### பத்தாண்டு அமைதியில் மந்தமான பொருளாதாரம்

பத்தாண்டுகளாக நிலவும் அமைதியால் ஓரளவுக்கே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழ்ச் சிறுபான்மைச் சமூகத்தினரின் பெரும்பாலான குறைகள் அப்படியே தீர்க்கப்படாமல் தொடர்கின்றன. மறுகுடியமர்த்தல்கள், மறுவாழ்வுப் பணிகள் ஓரளவுக்கு நடந்துள்ளன. ஆனால், அவை குறித்தும் மக்களிடையே முறைப்பாடுகள் அனேகம். தங்களுடைய காணிகளை ராணுவம் இன்னமும் ஆக்கிரமித்திருக்கிறது என்கின்றனர் தமிழர்கள். தமிழர்களுடைய நிலங்கள் மட்டுமல்ல அரசுக்குச் சொந்தமான நிலங்களும் ராணுவத்தின் வசம் உள்ளன. உறவினர்களை இழந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் பத்தாண்டுகளாகியும் அவர்களைத் தேடவும் முடியாமல், இருக்கும் இடமும் தெரியாமல் தவிக்கின்றனர்.

காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் நம்பிக்கையூட்டும் வகையில் செயல்படவில்லை. போரின் இறுதிக்கட்டத்தின்போது அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இன்னும் முழுமையாக இழப்பீடும், நீதியும் வழங்கப்படவில்லை. இலங்கை தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த விவகாரத்தில்கூட அற்பமான அரசியல் லாபம் தேடுவதுதான் தொடர்கிறது.

### தம்பட்டங்கள் அடிப்பதில் கடந்து சென்றது காலம்

போராளிகளுக்கு எதிரான போர் முடிந்த காலத்தின் முற்பகுதி, ஆட்சியாளர்கள் தங்களுடைய சகாசங்கள் குறித்துப் பெருமை பாராட்டிக்கொண்டதிலேயே கழிந்தது. அடுத்த பாதி, போர்க் குற்றங்களுக்காக சர்வதேசச் சட்டங்களின்படி தங்களுடைய ராணுவத்தினர் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்று தடுப்பதிலேயே கழிந்துவிட்டது. 2015ஆம் ஆண்டில் புதிய அரசு பதவியேற்றது. ஜனநாயக நிர்வாகம், அரசமைப்புச் சீர்திருத்தம் ஆகிய வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால், வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படும் பாதை நோக்கி நகர்ந்தபாடில்லை. போர் முடிந்து பத்தாண்டுகள் ஆன பிறகும்கூட போரின்போது அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டவர்கள் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை. காணாமல்போனவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற நிலையில், சமூகங்கள் இடையேயான இணக்கம் உண்டாவது சிரமம். அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலேயே எல்லாக் கட்சிகளும் குறியாக இருப்பதால் நல்ல நிர்வாகம், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சி, அரசியல் சட்டப்படியான தீர்வு ஆகியவை தொலைதூரக் கனவுகள் ஆகிக்கொண்டிருக்கின்றன.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளம் சமூகங்கள் இடையான பிணைப்பின் மீதும், நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த அரசு தன்னுடையது என்ற நம்பிக்கையின் மீதும்தான் கட்டப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி தனித்து உருவாவது அல்ல நடந்த தவறுகளுக்கு மனதாரப் பொறுப்பேற்பதன் வாயிலாகவே இலங்கையில் தமிழர்கள் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண முடியும்.

*நன்றி - தி ஹிந்து*

> காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் நம்பிக்கையூட்டும் வகையில் செயல்படவில்லை. போரின் இறுதிக்கட்டத்தின்போது அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இன்னும் முழுமையாக இழப்பீடும், நீதியும் வழங்கப்படவில்லை. இலங்கை தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த விவகாரத்தில்கூட அற்பமான அரசியல் லாபம் தேடுவது தான் தொடர்கிறது.



# ரிசாத்துக்கு எதிரான தீர்மானத்தை ஜே.வி.பி. ஆதரித்து வாக்களிக்கும்!

## அந்தக் கட்சியின் பரப்புரை செயலர் கூறுகிறார்

கொழும்பு, மே 29

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட 10 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்கும். தற்போதைய அரசின் எந்த அரசியல்வாதியையும் பாதுகாக்க வேண்டிய தேவை மக்கள் விடுதலை முன்னணிக்குக் கிடையாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவல மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது மக்கள் விடுதலை முன்னணி விவாதத்தின்போது முன்வைக்கப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த நபர்களுக்கு எதிராக வாக்களித்தது.

அரசின் எந்தவொரு உறுப்பினரையும் பாதுகாக்க வேண்டிய நோக்கம் ஜே.வி.பிக்கு கிடையாது. எமது கட்சி முழு அரசுக்கும் எதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது தேர்தலுக்கு வழி வகுக்காது. ஆனால் ஒரு புதிய அரசை உருவாக்க வாய்ப்பளிக்கும். நாடெங்கிலும் அதிகரித்துவரும் அழுத்தத்தின் காரணமாகவே அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது - என்றார்.

(எ)

# திருவிழா நடத்துமாறு கோவிலில் சத்தியாக்கிரம்

கிளிநொச்சி, மே 28

தென்மராட்சி வறணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டும், வருடாந்தம் திருவிழா நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து இன்று முற்பகல் 9 மெணிக்கு சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதற்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆதரவு வழங்கியுள்ளது.

முப்பது வருடங்கள் வரை திருவிழா இடம்பெறாதிருந்த இந்த ஆலயத்தில், கடந்த வருட தேர் திருவிழாவின்போது, பக்தர்கள் எவரும் வடம் தொட அனுமதிக்கப்படாது ஜே.சி.பி. இயந்திரம் மூலமாகத் தேர் இழுக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதால் இந்த வருட திருவிழாவை ஆலய நிர்வாகத்தினர் நிறுத்தி வைத்துள்ளனர் என்று மற்றைய தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆலய சில உபயகாரர்களும், அடியவர்களும் இணைந்து கடந்தவாரம் அடையாளப் போராட்டங்களைத் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக மேற்கொண்டிருந்தனர். இதில் அந்த மக்களுக்குத் தீர்வு வழங்கப்படாத நிலையில், அவர்கள் தமது போராட்டத்தைத் தொடர் சத்தியாக்கிரகமாக ஆலயச் சூழலில் முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-222)

# தண்ணீரும் மீனும் போலவே எப்போதும் மக்களும் பொலிசும் இருக்கவேண்டும்

## தென்மராட்சி ஏ.எஸ்.பி. தெரிவிப்பு

கொடிகாமம், மே 29

பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு சட்டத்தில் எல்லாப் பொறுப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டங்கள் இருந்தும் சிவில் பாதுகாப்பு குழுவினர், பொது மக்கள் எம்முடன் இல்லாவிட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் தண்ணீரும் மீனும் போல இருக்க வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தசநாயக்க தெரிவித்தார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:


நாட்டில் அவசரகாலச் சட்டம் போடப்பட்டுள்ளது. படையினருக்கும் அவசரகாலச் சட்டம் பாவிக்கும் நிலை யுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்தினதும் பிள்ளைகளினதும் பாதுகாப்புக்காகவுமே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி பாலாவி பகுதிகளில் அச்சுறுத்தல், வாள்வெட்டுக்கள், கள் என்பன இடம் பெற்றன. சிலர் சிறை செல்கின்றனர்.

பாலாவி கெற்பேலி பகுதிகளில் சண்டித்தனம் செய்வோர் சேர்ந்து அப்பாவியான வறிய குடும்பத்தைச் சேர்ந்த வயோதிபரைக் கொலை செய்தனர்.

கெற்பேலியில் மணல் தொடர்பாக வாள் வெட்டுச் சம்பவம் நடைபெற்ற போது பொலிஸாருக்குத் தகவல் தரவில்லை. இந்தப் பகுதியில் வறியவர்கள் அதிகம் இருக்கிறார்கள். மணல் ஏற்றி வியாபாரத்துக்கு கொண்டு செல்வதனைப்பற்றி தகவல் வழங்குவோரைத் தாக்கினால் பொலிஸ் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.



கசிப்பு, கஞ்சா, ஹெரோய்ன் பாவனைக்கு பாடசாலை மாணவர்கள் அடிமையாகின்றனர்.

நான் இந்தப் பகுதிக்கு வந்து ஆறுமாதங்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை உங்களைச் சந்திப்பேன்.

இனி குண்டு வெடிப்பு நடைபெறாது. சமாதானமாக செல்வதற்கு பொலிஸ் அலுவலர்களுக்குத்தான் பொறுப்பு உண்டு. உங்கள் பாதுகாப்பையும் எடுத்து கொண்டு சமாதானப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு இருக்க வேண்டும்.

எமக்கு மொழி தொடர்பான பிரச்சினை உண்டு. சிங்களம் தமிழ் இரண்டும் சேர்ந்து பொது மக்களுக்கு உதவி செய்ய வேண்டும்

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இரண்டு பொலிஸ் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். உங்கள் பகுதியில் பிரச்சினை ஏதும் இருந்தால் அந்த அலுவலர்களுக்கு அறிவியுங்கள். நான் கிராம அலுவலர் பிரிவுக்குப் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் வருவேன். பொலிஸார் சிவில் பாதுகாப்புக் குழு இரண்டு பக்கமும் சேர்ந்து சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்க வேண்டும். எல்லோரும் சமாதானமாக இருக்கத்தான் விரும்புவீர்கள். அதனைத் தான் நானும் விரும்புகிறேன்.

கெற்பேலி பாலாவிப் பகுதிகளில் மணல் அகழ்வதால் கடல்தண்ணீர் உட்புகும் அபாயம் உள்ளது. உங்கள் கிராமங்களை கடல் மூட வேண்டுமா? அல்லது பாதுகாக்க வேண்டுமா? ஒரு நாளைக்கு ஒருவராவது பொறுப்பதிகாரியால் கைது செய்யப்படுகின்றார். கைது செய்யப்படுபவர் உடனடியாக சிறையிலடைக்கப்படுகின்றார். ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது. நாம் இடையூறு செய்யவரவில்லை. உதவி செய்ய வந்தோம். எமக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறோம் என்றார்.

கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர், செ.மயூரன், உறுப்பினர் வை.ஜெகதாஸ், பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், கிராம அலுவலர், பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(த-159)

# உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் இடமாற்றம்

வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் பாசிக்குடா வீதிக்கு நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தஅலுவலகம் நீண்டகாலமாக வாழைச்சேனை பிரதான வீதியில் இயங்கி வந்தது. தற்போது இந்த அலுவலகம் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.எஸ்.ஜயசுந்தர, வாழைச்சேனை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன, கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீ.ஏ.டி. சுசந்த,வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி. எஸ்.பி. திசநாயக்க மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# தார் வீதிக்கு அடிக்கல்



யாழ்ப்பாணம்,மே 28

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட குமரகோட்டம் இரண்டாம் ஒழுங்கை தார் வீதீயாக மாற்றும் வேலைத்திட்டத்துக்கு அடிக்கல் நடப்பட்டது.

ஊரெழுச்சித் திட்டத்தினூடாக 10 லட்சம் ரூபா செலவின் குறித்த வீதி தார் வீதியாக சீர மைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசூதன் மற்றும் கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர், அயலவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# கைதிகளை விடுவிக்க மறுப்பது இனவேறுபாட்டின் அடையாளமே

## மைத்திரியை சாடுகிறார் தவராசா

யாழ்ப்பாணம் , மே 28

சிறைச்சாலையால் வந்த பின்பும் தொடர்ந்தும் குரோதத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தேரருக்கு மன்னிப்பு வழங்க முடியும் எனில் புலிகளுக்கு சோறு கொடுத்தனர் என்ற குற்றங்களுக்காக 10 , 15 வருடங்களாக சிறையில் இருப்பவர்களை விடுவிப்பது கடினம் என அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன கூறுவது உண்மையில் இன வேறுபாட்டின் அடையாளம். இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் போது அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் , மக்களின் நிலம் மக்களிற்கே , இந்த நாட்டின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு , காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு உரிய தீர்வு என பல போலி வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறிய அரச தலைவர் ஆட்சிக் காலம் முடிவதற்கு இன்னமும் 6 மாதம் உள்ள நிலையில்கூட எந்த வாக்குறுதியையும் முழுமையாக நிறைவேற்றவே இல்லை.

இதில் குறைந்த பட்சம் ஒரு நூறு அரசியல் கைதிகளை விடுவித்து தமிழ் மக்கள் அளித்த வாக்குகளுக்கு பரிகாரம் தேடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இவற்றில் எதையுமே செய்யாது இந்த நாட்டில் ஆட்சி செய்த இனவாத தலைவர்களில் இருந்து தான் சற்றும் குறைந்தவர் அல்ல. என்பதனை தற்போதைய அரச தலைவர் நிருபித்துக் கொண்டார். அரச தலைவருக்கு அரசியல் கைதிகளை விடுவிப்பது கடினமாகத் தெரிகின்றது. ஆனால் தேரரை விடுவிப்பது சுலபமாகிவிட்டது.

அதாவது தமிழ் வாக்கை சிதைப்பது சுலபம் சிங்கள வாக்கினை அடுத்த முறை தான் பெறுவது கடினம் என புரிந்து கொண்டதன் செயல்பாடே இது . அதனால். அரசியல் கைதிகள் விடயத்தில் இனியும் அரச தலைவரை நம்புவதில் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை - என்றார்.

(ஐ-105)

# நாட்டிலுள்ள அசாதாரண நிலையால் வாழைச் செய்கையாளர்கள் பாதிப்பு

## ஏற்றுமதி இல்லாதமையே முக்கிய காரணம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாண மாவட்ட வாழைச்செய்கையாளர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் பெரும் பாதிப்புக் களை எதிர்கொண்டுள்ளனர். தம்மால் உற்பத்தி செய்யப்படும் வாழைக்குலைகளை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்ய முடியாதமையாலேயே அவர்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப் படுகிறது.

கூடுதலாக கதலி வாழைக்கு லைகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதரை வாழைக்குலைகள் சந்தைக ளுக்கு குறைவாக வந்து சேர்வதால் அவை செய்கை யாளர்களால் ஓரளவு சந் தைப்படுத்தப்படுகின்றன. தற்போதைய அசாதரண சூழ்நிலையால் தெற்கில் இருந்து வாழைக்குலை களை கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகள் மிகமிக குறைந்தே காணப்படுகின்ற னர். போதிய ஏற்றுமதிகள் மற்றும் சந்தை வாய்ப்பின் றிய காரணத்தினால்தான் வாழைக்குலைகளின் விலைகள் பெரும் வீழ்ச்சி யடைய காரணம் என்று சந்தை வியாபாரிகள் தெரி வித்தனர். நேற்றைய சந்தை நிலைவரப்படி கதலி வாழைப்பழம் கிலோ 20 ரூபாவாகவும் இத்ரை வாழைப்பழம் கிலோ 30 ரூபாவாகவும் விற்கப்பட் டன. (ம-17)



வடமராட்சி,மே 28

வடக்கு மாகாணத்துக்கு புதிய மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபராக ரவி விஜயகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் உள்ள பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார். (ஐ-26)

## வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு இன்று

சாவகச்சேரி,மே 28

வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மொகிதீன் ஜும்மா பள்ளிவாசலில் மாலை 5.45 மணிக்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இமாம் மௌலவி அல்ஹாஜ் ஏ.எல்.றஸீம் சிறப்புரை வழங்கவுள்ளார். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ -9)

## தமிழ் அரசின் வாலிபர் முன்னணி கலந்துரையாடல் சனிக்கிழமை

கிளிநொச்சி, மே 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் நிர்வாகக் குழு கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் வாலிபர் முன்னணியின் தலைவர் சேயோன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வாலிபர் முன்னணியின் எதிர்கால அரசியல் செயற் பாடுகள் தொடர்பாகவும் சமகால அரசியல் கள நிலை தொடர்பாகவும் அதில் ஆராயப்படவுள்ளது என்று முன்னணியின் செயலர் சு.சுரேன் தெரிவித்துள்ளார். (து-6)



## நடைபாதைக்கு அடிக்கல் நடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே 28



திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை மாணவர்களுக்கான நடைபாதைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் நித்தியானந்தன் 24 ஆம் வட்டாரத்துக்கான 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் 30 லட்சம் ரூபா செலவில் நடைபாதை அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வு மாநகரசபை உறுப்பினர்களான நித்தியானந்தன், ப.தர்சானந்த், கி. டேமியன், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண மாநகர முதன்மைப் பொறியியலாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-105)



## சனசமூக நிலையக் கட்டடத்துக்கு அடிக்கல்

வடமராட்சி,மே 28

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கு செம்பியன் சனசமூக நிலையக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் எஸ்.பிரசாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.திரவியராசா, பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அரியகுமார் மற்றும் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனது நிதி ஒதுக்கீட்டில் கிடைக்கப் பெற்ற முப்பது லட்சம் ரூபா நிதியில் அமைக்கப்படவுள்ளது. (ஐ-70)

## மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கை

கொடிகாமம், மே 28

கைதடி தெற்கு தென்கிழக்கு பகுதிக்கு வீதி விளக்குகள் பொருத்துவதற்காக ஒரு தொகுதி மின் விளக்குகள் கையளிக்கும் நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது

கைதடி தெற்கு தென்கிழக்குப் பகுதி பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளை பொருத்தும் நோக்கில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 15 மின்விளக்குகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் செ.ஜெயபாலன் மற்றும் இ.யோகேஸ்வரன் ஆகியோர் சாவகச்சேரி பிரதேச சபையின் மின் இணைப்பாளர் மற்றும் களஞ்சியக் காப்பாளர் ஆகியோரிடம் இவற்றைக் கையளித்தனர். (ம-159)



## உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மே 28

வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான நடமாடும் சேவையை வருடத்தில் பன்னிரண்டு தடவைகளாவது நடத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான நடமாடும் சேவைகளை அந்தந்த மாவட்டங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொள்ளும்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான நடமாடும் சேவை இடம்பெறுவதற்கு முன்னர் அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களிடம் அதற்கான அனுமதி பெறப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான நடமாடும் சேவைகள் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு நாள் நடத்தப்படும்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் இந்த ஆண்டுக்கான கூட்டுறவின் பரிணமிப்பு இரண்டு வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை மக்கள் மத்தியில் ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-17)

## முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைப்பதற்கான சுற்றறிக்கை வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 28

2020 ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்து கொள்வதற்கு தேவையான விடயங்களை உள்ளடக்கிய சுற்றறிக்கை கல்வி அமைச்சால் நேற்று வெளியிடப்பட்டது.

மாணவர்களை இனைத்து கொள்வதற்கான விண்ணப்பபடிவங்களும்வெயிடப்பட்டுள்ளன.

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்வாங்கும் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் குறித்த பாடசாலையின் அதிபருக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# இராணுவ சோதனைச் சாவடிகள் குடாநாட்டில் சற்றுத் தளர்ந்தன!

யாழ்ப்பாணம், மே 28

ஈஸ்ரர் தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த படையினரின் சோதனைச் சாவடிகள் சில அண்மைய நாள்களில் அகற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் நுழையும் போது, நாவற்குழிப் பாலத்தில் பேருந்துகள், கனரக வானங்களைச் சோதனையிடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. அதுபோன்று பண்ணை வழியாக யாழ்ப்பாணத்துக்குள் நுழையும், யாழ்ப்பாணத்தில் இருந்து அந்த வழியாகச் செல்லும் வாகனங்கள், மக்களைச் சோதனையிடுவதற்காக மண்டைதீவுச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவச் சோதனைச் சாவடியும் அகற்றப்பட்டு மக்களின் சுமுகமானபோக்குவரத்துக்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி, கடந்த ஒரு வாரத்துக்கு முன்னரே அகற்றப்பட்டு சோதனைகள் தளர்த்தப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு, கொழும்பு மாவட்டங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் அவசரகாலச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து வீதிகளில் படையினரின் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், மக்களிடத்திலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் குண்டுவெடித்த போதும் அந்த மாவட்டத்தில் போடப்பட்ட பாதுகாப்பையும், சோதனைச் சாவடிகளையும் காட்டிலும், வடக்கு மாகாணத்தில் ஏராளமான சோதனைச் சாவடிகள் போடப்பட்டிருந்தன.

நாவற்குழிப் பாலம், மண்டைதீவுச் சந்தி, பொன்னாலைச் சந்தி, சங்குப்பிட்டி வளைவு, பூநகரி வளைவு, ஆனையிறவு, பல்லவராயன் கட்டுப் பகுதி போன்ற இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வடக்கு மாகாணத்துக்குள் வருவதற்கும், வெளியில் செல்வதற்கும் இந்தச் சோதனைச் சாவடிகளில் அடிக்கடி இறங்கி ஏற வேண்டிய தேவை மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதுதொடர்பில் வடக்கு மக்கள் தங்களது அதிருப்திகளை கடுமையாக வெளியிட்டு வந்தனர். இந்த விடயம் தொடர்பில் ஒருசில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுத்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போது ஒரு மாதத்தின் பின்னர் அந்தச்சோதனைச் சாவடிகளில் சிலவற்றில் சோதனைகள் தளர்த்தப்பட்டுள்ளன. எனினும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் காரைநகர் செல்லும், பயணிகளைப் பரிசோதிக்கும், வாகனங்களைச் பரிசோதிக்கும், பொன்னலைச் சோதனைச் சாவடி, மற்றும் பருத்தித்துறை செல்லும் வழியில் உள்ள வல்லை வெளிச்சோதனைச் சாவடி, காங்கேசன்துறை செல்லும் வழியில் உள்ள மயிலிட்டி சோதனைச் சாவடிகளில் தற்போதும் சோதனைகள் இடம்பெறுகின்றன. அவையும் சில தினங்களில் அகற்றப்படும் என்ற எதிர்ப்பார்ப்பும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. (ம21,26)



## கிராமசக்தி மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 28

கிராமசக்தி செயற்திட்டத்தின் பிரதேசங்களுக்கான மீளாய்வுக் கூட்டம் சங்கானை பிரதேச செயலகத்தில் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

திட்டங்கள் தொடர்பான மீளாய்வு, எதிர் நோக்கும் சாவல்கள், பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. நிகழ்வில் சங்கானை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள், பொதுமக்கள், தெரிவு செய்யப்பட்ட 12 கிராமங்களைச் சேர்ந்த நிர்வாக உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-7)



## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மே 28

முச்சக்கர வண்டியுடன் மூடுந்து மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் கச்சேரி பெந்தகோஸ்தே தேவாலயத்துக்கு அருகில் நேற்று மதியம் 12.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் ஏ9 வீதி வழியாக யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி பயணித்த மூடுந்து வாகனம், முன்பாக சென்ற பட்டா ரக வாகனத்தை கடந்து செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்த முச்சக்கரவண்டி மீது மோதியதில் விபத்து ஏற்பட்டதாக யாழ்ப்பார்ணப் பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டி பெரியளவில் சேதமடைந்துள்ளது. அதில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-106)

# வளப் பற்றாக்குறையுடன் இயங்கிவரும் கொடிகாமம் பிரதேச மருத்துவமனை

உரிய நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கோரிக்கை

சாவகச்சேரி,மே 28

12 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு சேவை வழங்கவென இயங்கிவரும் கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச மருத்துவமனையில் பல வளக் குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தி அவற்றினை நிறைவேற்ற நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.ராஜகுமார் தெரிவித்தார்.

மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மருத்துவமனை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மருத்துவமனையானது பளை மருத்துவமனைக்கும் சாவகச்சேரி மருத்துவமனைக்கும் இடையில் ஏ9 முதன்மை வீதியில் உள்ளது. இந்த மருத்துவமனையில் காணப்படும் சில குறைபாடுகளால் நோயாளர்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கு செல்கின்றனர்.



இந்த மருத்துவமனையில் 2 மருத்துவ அதிகாரிகளும் ஒப்பந்த அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவரும் பணியாற்றி வருகின்றோம். இங்கு வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, கிளினிக்குகள் போன்றவை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

நோயாளர் காவு வண்டி வசதி இருப்பதால் அவசர நோயாளர்கள் சாவகச்சேரி மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை போன்றவற்றுக்கு அனுப்பி வருகின்றோம். 24 மணி நேர மருத்துவ சேவையை வழங்குமாறு கோரப்பட்டது. 24 மணி நேர சேவையை வழங்குவதாயின் 4 மருத்துவர்கள் 2 தாதிய அலுவலர்கள், 2 குடும்பநல அலுவலர்கள் தேவை.

பிரசவத்துக்கு சேர்க்கப்படும் போது அவர்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாயின் குடும்பநல அலுவலகர்களும் செல்ல வேண்டும். தற்போது ஒரு குடும்பநல அலுவலகர் மட்டுமே கடமையாற்றுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மருத்துவமனையில் பெண்களுக்கென விடுதி இல்லை பிரசவ விடுதி கூட சற்றுத் தூரத்தில் உள்ளது. இரவு வேளைகளில் பிரசவத் தாய்மாரை விடுதிக்கு அழைத்து செல்வதில் பல்வேறு இடர்களைக் காண்கிறோம்.

மருத்துவமனையில் மின் விளக்குகள் இலவசமாக பூட்டித் தர இலங்கை மின்சார சபையினர் முன்வந்துள்ளனர். எனவே உள்ளூர், புலம்பெயர் நாடுகளிலிருந்து வருவோர் தேவையான அளவு மின்விளக்குகளை எமக்கு வழங்கினால் சில தேவைகளை நிறைவேற்ற முடியும்.

கச்சாய், கெற்பேலி, விடத்தற்பளை, கொடிகாமம் போன்ற பகுதிகளில் நடமாடும் சேவை நடத்துமாறு கோரிக்கை விடப்பட்டது. நடமாடும் சேவை நடத்துவதாயின் தாதிய அலுவலகர்கள் மற்றும் மருந்துக் கலவையாளர் சிற்றூழியர்கள் தேவை. இவ்வாறான பல குறைகளுடன் இயங்கிவரும் இந்த மருத்துவமனையை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ஐ-159,9)

## கத்திக்குத்து காயங்களுடன் குடும்பத் தலைவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி,மே 28


கத்திக்குத்துக்கு இலக்கானதாகத் தெரிவித்து குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் கெற்பேலி மேற்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் கந்தசாமி (வயது - 55) என்ற குடுபத் தலைவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குடும்பத் தலைவர் வீதியால் சென்றுகொண்டிருந்தவேளை வீதியில் மறைந்திருந்த ஒருவர் அவரை கத்தியால் குத்தினார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)



## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 28

மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி சாவகச்சேரி மட்டுவில் பிரதேச சவாரி திடலில் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட சவாரி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி, பூநகரி வட்டுக்கோட்டை, அளவெட்டி, சாவகச்சேரி, கீரிமலை, சங்குவேலி, போன்ற இடங்களில் இருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பிரதேச சபை உறுப்பினர், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## காணிக்குள் இருந்து குண்டு மீட்பு

சாவகச்சேரி, மே 28

பற்றைகளாக காணப்பட்ட காணியைத் துப்புரவு செய்த போது வெடிக்காத நிலையில் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நாவற்குழி- கேரதீவு ஏ 32 வீதியில் பற்றையாகக் காணப்பட்ட காணியை விவசாயம் செய்வதற்கு திருத்த வேலைகளை மேற்கொண்டபோது வெடிக்காத நிலையில் குண்டு காணப்பட்டது.

இதனையடுத்து உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பகுதிக்குச் சென்ற சாவகச்சேரி பொலிஸார் அங்கு பாதுகாப்பை ஏற்படுத்திய பின்னர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் குண்டினை அகற்றி செயலிழக்கச் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த வாரம் தனன்களப்பு பகுதியில் காற்றாலை அமைக்கும் பகுதியில் கிளைமோர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# அத்துமீறிய சிறுபோகச் செய்கை விவரங்களை உடன் சமர்ப்பிக்கவும்

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் அவசர உத்தரவு

யாழ்ப்பாணம், மே 28

கிளிநொச்சி மாவட்ட இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த வருட சிறுபோக நெற் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட அளவீடுகளை விடவும் மேலதிகமாக விதைக்கப்பட்டுள்ள அளவீடுகள், அதன் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கமநல சேவைத் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பனவற்றுக்கு மாவட்டச் செயலர் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் இந்தமுறை 15 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கையும் 500 ஏக்கர் சிறுதானியமும் அனுமதிக்கப்பட்டு அதற்கேற்ப அளவீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் பலர் மேலதிக விதைப்பிலும் ஈடுபட்டுள்ளனர் என்றுமுறையிடப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் திணைக்களங்கள் கமக்கார அமைப்புக்களின் உதவியுடன் அளவீட்டிலும் ஈடுபட்டு வருகின்றன.

இதுவரையான அளவீடுகளில் சுமார் 700 ஏக்கர் நெற் செய்கை மேலதிக விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட அளவுகளில் அதிக பட்சமாக பெரிய குளம் பகுதியில் 200 ஏக்கரும் , குமரபுரத்தில் 150 ஏக்கர் , வலதுகரை 70ஏக்கர் பகுதி என 100 ஏக்கர் காணப்படுவதோடு பழைய வட்டக்கச்சியின் உடையார் வளவை அண்டிய பகுதிகளில் 150 ஏக்கர் நிலமும் அடையாளம் கானப்பட்டன.

இதேநேரம் அளவீட்டுப் பணிகள் முழுமை பெறாது தொடர்ந்தும் இடம்பெறும் நிலையில் இதன் அளவுகள் மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாகவே தெரிவிக்கப்படும் நிலையில் இது தொடர்பில் கமநல சேவைத் திணைக்களம் , நீர்ப்பாசனத்திணைக்களம் என்பன மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

இதன் காரணமாகவே அத்துமீறிய செய்கை தொடர்பில் இறுதித் தீர்வை எட்டும் நோக்கில் உடனடியாக அந்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு மாவட்டச் செயலர் வேதநாயகன் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார். (த-105)



# நாளாந்த சமயலறைக் கழிவுகளை அகற்றும் செயற்றிட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளாந்த சமயலறைக் கழிவுகளை அன்றே அகற்றும் புதிய செயற்றிட்டத்தை நேற்றையதினம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களின் தூய்மை மற்றும் துர்நாற்றம் அற்ற சூழலை உருவாக்கும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுத்தமான பசுமை நகரை நோக்கிய திட்டத்தின் கீழான சமயலறைக்கழிவுகள் அகற்றும் செயற்பாடு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அந்தவகையில் மாநகர குப்பைகாவும் வண்டிகளின் மூலம் சமலறைக்கழிவுகளை அகற்றும் புதிய செயற்றிட்டம் பரீட்சாத்தமாக நேற்றுக் காலை 6 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதன்மைப் பொறியியலாளர், மாநகர பொதுச்சுகாதாரப் பொறியியற்பிரிவின் முதன்மைப் பொறுப்பதிகாரி, மாநகர பொதுச்சுகாதாரப் பொறியியற்பிரிவின் அலுவலர்கள், யாழ்ப்பாண மாநகர் வாகனப் பகுதியின் முதன்மைப் பொறுப்பாளர், மாநகரசபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த செயல்திட்டத்தின் வெற்றி மற்றும் இதன் தேவையை அறிந்து குறித்த செயல் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். என முதல்வர் குறிப்பிட்டார். (ஜ-105)

### சாவகச்சேரி சந்தையை

# குத்தகைக்கு விடும் திட்டத்தை எதிர்த்து வியாபாரிகள் நாளை கவனவீர்ப்பு

சாவகச்சேரி,மே 28

சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விடும் திட்டத்தைக் கைவிட்டு வியாபாரிகளின் நலன்களில் அக்கறை செலுத்துமாறு வலியுறுத்தி சந்தை வியாபாரிகள் நாளை புதன்கிழமை சந்தையை மூடி கவனவீர்ப்பு போராட்டத்தைமுன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விட வேண்டும் என வலியுறுத்தி கடந்த அமர்வில் தவிசாளரின் எதிர்ப்பின் மத்தியில் உறுப்பினர்களின் முடிவுகளுக்கமைய குத்தகைக்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டது. அதற்கான கேள்வி கோரலும் நகரசபையால் விடப்பட்டது.

இந்த நிலையில் சந்தையைக் குத்தகைக்கு விடும் திட்டத்தை கைவிட்டு வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக சபை உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினைக் கண்டிக்கின்றோம். சந்தையைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வருகை மட்டுமல்ல நுகர்வோரின் வருகையும் பாதிக்கப்படும் என்பதால் சந்தையை குத்தகைக்கு விடும் நடவடிக்கையை கைவிடுமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தனர்.

தமது போராட்டத்துக்கு ஆதரவு நல்குமாறு நகரப் பகுதி வர்த்தகர்களையும் கோரியுள்ளனர். அத்துடன் சந்தை தொடர்பான எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் சபையின் தவிசாளர், செயலர், சந்தை அலுவலர் போன்றோர் மட்டும் எம்முடன் கலந்துரையாட வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

பொதுமக்கள், உற்பத்தியாளர்கள் போன்றோர் சந்தைக்குள் இலகுவாக வருவதற்கு அனைத்து கடவைகளும் திறக்கப்படல் வேண்டும்.

சந்தை வியாபாரிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் உற்பத்தியாளர்கள் போன்றோரால் கொண்டு வரப்படும் வாகனங்களுக்கு பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கவேண்டும். உழவர் சந்தைக்கான இடத்தை மாற்றியமைக்கவேண்டும் நகரசபையுடன் ஒத்துழைக்க நாம் தயாராக உள்ளோம். அவ்விதம் நகரசபையும் வியாபாரிகள் நுகர்வோரின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

சந்தையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தவிசாளரிடம் பலதடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் உரிய பதில் கிடைக்காத நிலையிலேயே கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

கடந்த ஒக்டோடர் மாதம் தொடக்கம் சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க வேண்டுமென அமர்வுகளில் சபையின் உறுப்பினர்கள் சிலர் விடாப்பிடியாக நின்றபோதிலும் அதனை நிறை வேற்றுவதில் தவிசாளர் பின்னடித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் சந்தையை குத்தகைக்கு விடல் வேண்டுமென உறுப்பினர்கள் வலியுறுத்தினர். இதற்கு தவிசாளர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் ஏனைய உறுப்பினர்களின் முடிவுக்கமைய உற்பத்தியாளர்நுகர்வோரின் நலனுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் சந்தையைக் குத்தகைக்கு விடுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து சபையால் சந்தையைக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரலுக்கு விடப்பட்டது. (ஐ-9)

# முஸ்லிம் அரசியல்வாதிகளை அரசு கட்டுப்படுத்த வேண்டும்

## புதுக்குடியிருப்பு சபை உறுப்பினர் கூறுகிறார்

அரசு தனது பெரும்பான்மையைத் தக்கவைக்க வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் அரசியல் வாதிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஆ.ஜோன்சன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் 21 ஆம் திகதிய குண்டு வெடிப்பானது இலங்கை அரசுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் பிடரியில் குத்தியது போன்று பதிவாகியுள்ளது. விடுதலைப்புலிகளை அழித்து விட்டோம் என்று இலங்கை அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது.

இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்குச் சொல்லுகின்ற செய்தி என்னவென்றால், நாட்டில் உள்ள அரசியல் வாதிகள் பன்னாட்டுப் பயங்கரவாதத்தை ஏற்படுத்தியதற்குத் துணையாக இருந்த ஸஹ்ரான் குழுவினர் உள்ளிட்ட முஸ்லிம் அரசியல் வாதிகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய தேவை ஒன்று உள்ளது. கடந்த காலத்தில் இதைத்தான் தமிழ் அரசியல் வாதிகளும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள் - என்றார். (த-ரி3)

# சமுர்த்தி வங்கிகள் தரப்படுத்தல் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 28

சமுர்த்தி வங்கிகள் தரப்படுத்தலுக்கான மதிப்பீட்டுக் குழு பிரதேச செயலக ரீதியான மதிப்பிடலை தற்போது ஆரம்பித்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமுர்த்தி பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சமுர்த்தி வங்கிகள் அவற்றின் செயற்பாட்டுக்கு ஏற்ப தரப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக ஆங்கில எழுத்து ஏ,பி ,சி என்ற வகையில் அவை தரப்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான குழு சமுர்த்தி வங்கிகளுக்கு நேரடியாக சென்று நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இவ்வாறு தரப்படுத்தப்படும் விடயங்கள் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் கொழும்பில் இருந்து மதிப்பீட்டுக் குழு ஒன்று வருகை தந்து அதனை பரிசீலனை செய்து உறுதி படுத்தி கொள்ளும்.

இவ்வாறு இடம்பெறும் மதிப்பீட்டின் மூலம் வருடாந்தம் சிறந்த வங்கிகள் தெரிவு செய்யப்படுகின்றன.

அன்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அளவெட்டி சமுர்த்தி வங்கி, மல்லாகம் சமுர்த்தி வங்கி என்பன பார்வையிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# பூங்கா அமைக்க 5 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே 28

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்துக்கு பூங்கா அமைப்பதற்கென 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பூங்கா அமைப்பதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு பாவனைக்கு திறந்துவைக்கப்படும் என்று யாழ்ப்பாண மாநகர சபை பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். (ஐ-17)

மக்களை அச்சுறுத்தினாரென

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

வவுனியா, மே 28

மதுபோதையில் கிராம மக்களை அச்சுறுத்தினார் என்றும் இடியன் துப்பாக்கி வைத்திருந்தார் என்றும் இரு குற்றச்சாட்டுக்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் வவுனியா நெளுக்குளம் சாம்பல்தோட்டம் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அச்சுறுத்தல் பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் அங்கு சென்றனர். அவர்களைக் கண்டதும் சந்தேகநபர் தப்பி ஓடியுள்ளார். துரத்திச் சென்று அவரைக் கைது செய்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 33வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விசா ரணைகளின் பின்னர் நீதிவானிடம் முற்ப டுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும்தெரிவித்தனர். (கு)



## நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் கலந்துரையாடல் வவுனியாவில்

வவுனியா, மே 28

வவுனியா மாவட்டத்தில் நல்லிணக்கம் சம்பந்தமான செயற்பாடுகளை வலுப்படுத்தும் கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கிராம முகாமைத்துவத்துக்கான நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் வவுனியா மாவட்ட சர்வமதக் குழுவும் இணைந்து இதனை நடத்தியது.

கலந்துரையாடல் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் மற்றும் சர்வமதத்தலைவர்கள், வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள், பொலிஸ் அலுவலர்கள், சமூக நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் அசாதாரண சூழ்நிலையில் ஏற்படும் பாதுகாப்பு நடைமுறை, அதனால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடு, மதங்களை ஒற்றுமையுடன் வலுப்படுத்தல், வன்முறைகளைத் தடுக்க பாடசாலைகள் மற்றும் சமூகமட்ட நிறுவனங்கள், மதத் தலங்களில் முன்னெடுக்க வேண்டிய ஏற்பாடுகள், தனி நபர் நல் மனப்பாங்கை வளர்த்தெடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (கு-402)

## எவையெல்லாம் சுயதொழில்கள்?

### இனங்காணும் பயிற்சிப்பட்டறை கிளிநொச்சியில் இன்று நடக்கும்

கிளிநொச்சி, மே 28

இளையோர் புதிய சுயதொழில்களை இனம்காண்பதற்கான பயிற்சிப் பட்டறை மற்றும் சுயதொழில் இனம் கண்டதன் பின்னர் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடும் இன்று இடம்பெறவுள்ளது.

யு.என்.டி.பி. நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தத் திட்டம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள கே.கே.ஆர். விடுதியில் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 230 வரை நடைபெறவுள்ளது.

சுயதொழில் செய்ய விரும்பும் இளையோர் இதில் பங்குபற்ற முடியும் என்று கரைச்சிப் பிரதேச இளைஞர் சேவைகள் அலுவலர் தெரிவித்தார். (கு-222)

# மகாவலி எல் வலய காணிகளை விடுவிக்குமாறு மைத்திரிக்கு மனு

## முல்லைப் பயணத்தின்போது வழங்கப்படும் என்று கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. தெரிவிப்பு

*முல்லைத்தீவு, மே 28*

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி ‘எல்’ வலய அபிவிருத்தி என்ற போர்வையில் பேர்மிட், உறுதிகள் உள்ள தங்களின் காணிகள் பறிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டதை அரசதலைவருக்குத் தெரியப்படுத்தவும், அதற்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் மனு வழங்கப்படவுள்ளது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா இதைத் தெரிவித்தார். இந்தக் காணி பறிப்புத் தொடர்பில் நாடாளுமன்றிலும், அமைச்சுக்களிலும் பல கூட்டங்களில் தெரியப்படுத்தியும் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் கடும் விசனம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களைச் சேர்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் முள்ளியவளையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்திமேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 8ஆம் திகதி அரசதலைவர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வரவுள்ளார். அவர்தான் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருக்கின்றார். அவரிடம் எல் வலயப் பிரச்சினையைக் கூறி, அன்று வரும் நடமாடும் சேவையின் அதிகாரிகளுக்கும் இது தொடர்பான மனுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எல் வலயத்திலுள்ள காணிகளை மீளவும் தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுக்க உத்தரவிடுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

இது நிர்வாக நடவடிக்கைக்கு அப்பால் அரசியல் ரீதியில் கையாளவேண்டியது.

அபிவிருத்தி எங்கள் மக்களுக்குத் தேவைதான். அதற்காக மகாவலி எல் வலய அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களின் காணிகளை ஆக்கிரமிக்கின்றமையும் சூறையாடல்களும்தான் தொடர்கின்றது. இவை நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (கு-ரி3)

## ‘புத்தகத்தால் புத்தாக்கம் கொள்வோம்’ ‘அம்மம்மா அறக்கட்டளை’ ஆரம்பிப்பு





முல்லைத்தீவு, மே 28

‘புத்தகம் தன்னால் புத்தாக்கம் கொள்வோம்’ எனும் கருப்பொருளில் போரால் பாதிப்புற்ற பாடசாலைகளில் நூலகச் செயற்பாடுகளை ஊக்குவித்து, தகுதியான நூல்கள், பிற துணைப் பொருள்கள் வழங்கி மாணவர்களுக்கும், சமூகத்தின் ஏனையவர்களுக்கும் கைகொடுக்கும் திட்டமாக, ‘அம்மம்மா அறக்கட்டளை’ ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இது ஆரம்பிக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்து தில்லையம்பலம் நந்தினி குடும்பத்தினரின் நிதி ஒதுக்கீட்டில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேராவில் தமிழ் வித்தியாலய அதிபர் பெ.பாலகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன் கலந்து கொண்டார்.

தேராவில் தமிழ் வித்தியாலய ஆசிரியர் எம்.ருபேஸ்குமார் வரவேற்புரை வழங்கினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து இந்தப் பணி தொடர்பான அறிமுகத்தை யோ.புரட்சி வழங்கினார்.

தொடர்ந்து ‘புதியபியூனிக்ஸ் மாற்றுத் திறனாளி கள் அமைப்பு’ தலைவர் இ.பிரபாகரன் உரை நிகழ்த்தினார். எழுத்தாளர்கள் சார்பில் எழுத்தாளரும் ஆயுள்வேத வைத்தியருமான ந.சிவசுப்பிரமணியம் நூலகச் செயற்பாடுகள் பற்றி கருத்துரைத்தார்.

> “ போரின் கொடிய தாக்கங்களிலிருந்து அவ்வளவு இலகுவாக விடுபட முடியாது. எனினும் அதன் தாக்கங்களின் வீதத்தைக் குறைக்க முடியும். அதற்கு ஆகார மூட்டல் மட்டும் போதாது. அறிவூட்டலும் அவசியம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர், புதிய பியூனிக்ஸ் அமைப்பின் தலைவர், நிகழ்வில் பங்கேற்ற பாடசாலை அதிபர்கள் ஆகியோர் தேராவில் தமிழ் வித்தியாலய அதிபரிடம் புத்தகங்களைக் கையளித்தனர்.

தொடர்ந்து நூலக பார்வையிடலும் இடம்பெற்றது. இந்தச்செயற்பாட்டைக் கேள்வியுற்ற புதிய பியூனிக்ஸ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் இ.பிரபாகரன், உலகப் புகழ்பெற்ற ஒரு தொகுதி ‘பிரிட்டனிகா’ கலைக்களஞ்சிய நூல்களை நிகழ்வில் வைத்து வழங்கினார். நன்றியுரையை ஆசிரியர் ரி.சாந்தகுமார் வழங்கினார்.

போரின் கொடிய தாக்கங்களிலிருந்து அத்தனை இலகுவாக விடுபட முடியாது. எனினும் அதன் தாக்கங்களின் வீதத்தைக் குறைக்க முடியும்.

அதற்கு ஆகாரமூட்டல் மட்டும் போதாது. அறிவூட்டலும் அவசியம். போருக்குப் பிந்திய நற்பணியொன்று வன்னியில் நடந்தேறியுள்ளது என்றுநிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர். (கு-159)

## வில்பத்து வனத்தை அண்மித்து மரக்கன்றுகள் நேற்று நடுகை


மன்னார், மே 28


காடழிப்புச் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட வில்பத்து வனப்பரதேசத்தை அண்டிய கல்லாறுப் பகுதியில் மரக்கன்றுகள் நடுகை செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

‘காடழிப்பைத் தடுப்போம், இலங்கையைக் கட்டியெழுப்புவோம்’ என்னும் தொனிப் பொருளில் நேற்று முற்பகல் 10.30 தொடக்கம் மதியம் ஒரு மணி வரை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டது.

பௌத்த துறவி பாய ஆனந்த சாகர ஹிமி தலைமையில் 50 கொண்ட குழுவினரும் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மேஜர் லேகம் கே உட்பட பதினைந்து இராணுவத்தினரும் இணைந்து முதற் கட்டமாக 150 மரக்கன்றுகளை நட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வில்பத்து வனப் பகுதியை அண்மித்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் காடுகளை அழித்து வருகிறார் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர். அதனை ரிசாத் மறுத்து வருகீறார். (கு-213)







## முள்ளிவாய்க்கால் மண்ணில் இந்தியக் குழுவினர் அஞ்சலி

முல்லைத்தீவு, மே 28

இந்தியாவிலிருந்து வந்திருந்த இந்து மக்கள் கட்சி மற்றும் பாரதீய ஜனதாக் கட்சிக் குழுவினர் முள்ளி வாய்க்காலில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்து சங்கிலிய மன்னன் விழாக்குழு விடுத்த அழைப்பின் பெயரில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்தியக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இறுதிப்போரில் உயிரிழந்த மக்கள் நினைவான முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு சென்று மக்களுக்காக அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கும் சென்று வழிபாடு மேற்கொண்டனர். (த-ரி3)




## தமிழர் மறுவாழ்வுக் கழக உடமைகள் ஆள்கள் வசிக்காத வீட்டில் மீட்பு

வவுனியா, மே 28

வவுனியாவில் ஆள்கள் வசிக்காத வீட்டிலிருந்து தமிழர் மறுவாழ்வுக் கழகத்தின் சில பொருள்கள், ஆவணங்கள் என்பன நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் பிரிவிலுள்ள மரக்காரம்பளைப் பகுதியிலுள்ள வீட்டிலேயே இவை மீட்கப்பட்டன.

குறித்த வீடு தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து நீதி மன்ற அனுமதியுடன் பொலிஸார் சோதனை நடத்தினர். அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகக்கட்டமையின் கீழ் செயற்பட்ட தமிழர் மறுவாழ்வுக் கழகத்தின் உடல் அங்கிகள், ஆவணங்கள், உந்துருளி இலக்கத்தகடுகள் என்பன மீட்கப்பட்டன. பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் இது பற்றி விசாரணை நடத்துகின்றனர். (த)

### கிளி., முல்லை, மன்னார் மாவட்டங்களிலும்

# சங்கிலிய மன்னனுக்கு சிறப்பான கிரியைகள்

முல்லைத்தீவு, மே 28

*யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் 400ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதைத் தொடர்ந்து, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் அஞ்சலி மற்றும் கிரியைகள் நேற்று நடைபெற்றன.*


முல்லைத்தீவு

**கிளிநொச்சி**

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள சிவனாலயத்தை அண்மித்த நீர்த்தேக்கத்துக்கு அருகில் கிரியை இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சு.பசுபதிப் பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மன்னனுக்கு இந்து சமய முறையிலான கிரியைகள் இடம்பெற்றன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் தர்ப்பணம் கொடுக்கப்பட்டது.

சங்கிலிய மன்னன் சிராத்த தினமான வைகாசி தேய்பிறை எட்டாம் நாள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் நந்திக்கடல் கரையில் தர்ப்பணம் கொடுக்கப்பட்டது.

தர்ப்பணம் செய்யப்பட்டு பிண்டம் நந்திக்கடலில் கரைக்கப்பட்டது.

**மன்னார்**

மன்னார் திருக்கேதீச்சரத்தில் திருக்கேதீச்சரத்தின் பாலாவிக் கரையில் கிரியைகள் நடைபெற்று தர்ப்பணம் புனித பாலாவிக்


கிளிநொச்சி

கங்கையில் கரைத்துவிடப்பட்டது.

இந்[illegible]ல் மன்னார் மாவட்ட சிவசேனை அமைப்பின் தலைவர் மற்றும் சிவத்தொண் டர்கள் ஈடுபட்டிருந்தனர்.


யாழ்ப்பாணம்




மன்னார்



**யாழ்ப்பாணம்**

சங்கிலிய மன்னனின் 400 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு கீரிமலையில் நேற்று சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

சங்கிலியன் நினைவுக் குழுவுடன் சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமயப் பெரியார்கள் இந்தப்பூசையில் இணைந்திருந்தனர். சங்கிலிய மன்னனின் நினைவு மலர் கும்பத்தில் வைத்து சிறப்பு பூசைகள் நடைபெற்றன. பிதிர்க்கடன் நிகழ்வும் அங்கு இடப்பெற்றது.

நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சிலைக்கு நேற்று முன்தினம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (த-7,ரி3,35,6,213)

# ‘ஆசிரிய சமூகத்தினரை இழிவுபடுத்தாதே’

## வவுனியாவில் ஆசிரியர்கள் போராட்டம்

வவுனியா, மே 28

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பாடசாலை முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு சில ஆசிரியர்கள் மற்றும் சிலரால் வேண்டுமென்றே ஆசிரியர் சமூகம் இழிவுபடுத்தப்படுகிறது என்று தெரிவித்தும் அதனைக் கண்டித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டத்தின் போது, கைமாறப்பட்ட அநாமதேய துண்டறிக்கையில் ஆசிரியர் சமூகத்தை இழிவுபடுத்தும் விதமான கருத்துக்கள் இருந்தன என்றும் ஒரு சில ஆசிரியர்களே இந்தத் துண்டறிக்கையை விநியோகித்து வேண்டுமென்றே ஆசிரியர்களைக் கேவலப்படுத்துகின்றனர் என்று கூறி ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சில ஆசிரியர்களின் பெயர்களைத் துண்டறிக்கையில் எழுதியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்களாக நாங்கள் எவ்வாறான ஒரு பொறுப்பைக் கையில் எடுத்திருக்கின்றோம்! எங்களுடைய மனதை நோகடித்தால், இந்தச் சமூகம் தனது கடமையை விட்டுச் சென்றால் இந்தப் பாடசாலை என்னாவது? மூவாயிரம் மாணவர்களின் கல்வி நிலை என்னாவது? தவறு செய்யாத மனிதர்கள் இல்லை, தவறு செய்திருந்தால் தகுந்த முறையில் ஆதாரங்களை நிரூபித்து தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கலாம். அவற்றுக்கு மாறாக நாங்கள் நிற்கவில்லை. பாடசாலையின் அதிபரை சமூக மதிப்புடையவரை, அவமானப்படுத்த முடியாது. ஆசிரியராக நாங்கள் அவமானமடைந்திருக்கின்றோம்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும்.

எமது கல்வித்திணைக்களம் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனுடன் தொடர்புடைய ஆசிரியர்களைத் தற்காலிகமாக இடை நிறுத்தவேண்டும் என்று கூறி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் பாடசாலைக்கு வந்து அதிபருடன் கலந்துரையாடினார். அதனையடுத்து ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்து வகுப்புக்களுக்குச் சென்றனர்.

வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தின்போது, அதிபருக்கு எதிராகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நிதிமோசடிக் குற்றச்சாட்டுகளும் அவர் மீது சுமத்தப்பட்டன. இதனால் அவர் கூட்டத்தில் இருந்து வெளியேறியிருந்தார். இதனையடுத்து அதிபர் பதவிவிலகியுள்ளார் என்ற கருத்துக்களும் பரப்பப்பட்டன. எனினும் அதிபர் தான் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என்றும், சிலர் திட்டமிட்டுக் கூட்டத்தை குழப்பியுள்ளனர் என்றும் உதயனுக்குத் தெரிவித்திருந்தார். இவ்வானதொரு நிலையிலேயே நேற்று அதிபருக்கு ஆதரவாகவும், ஆசிரியர்களை அவமானப்படுத்தியதைக் கண்டித்தும் பாடசாலை ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (த-21)

# தேர்தலை இலக்கு வைப்பதால் அரசியல் கைதிகளை விடார்!

## மைத்திரியைச் சாடுகிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், மே 28

அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு செயல்படும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது எனக் கூறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பேன் எனக் கூறி வந்த அரச தலைவர் தற்போது அரசியல் கைதிகளை விடுவிப்பது கடினம் எனக் கூறியுள்ளார். அக் கூற்றினை கூறுவதற்கு இரு தினங்களின் முன்பே ஞானசார தேரருக்கு மன்னிப்பளித்தார். இந்த இரு செயலின் மூலமே அவரின் நிலைப்பாடு உறுதியாக தெரிந்துவிட்டது. அதனால் அது தொடர்பில் இனி அரச தலைவரை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அடுத்த தேர்தலை இலக்காக கொண்டு செயல்படும் அரச தலைவர், தான் ஒரு கடும்போக்கு சிங்கள தேசியவாதியாக தன்னை சித்தரித்து அதன் மூலம் சிங்கள மக்களிடத்தில் ஓர் இடத்தை பிடிக்க கலாம் என நம்புகின்றார். அதனால் இந்த அரச தலைவர் இது மட்டுமல்ல இன்னமும் அதிகமாகவும் பேசுவார்.



அதனால் இது ஆச்சரியமான செய்தி அல்ல. இருப்பினும் இவை அனைத்துக்கும் மேலாக நாம் எமது கோரிக்கையைக் கூற வேண்டிய தேவை உள்ளது - என்றார். (ஜ-105)

# வன்முறைக்கு தூபமிடுகிறது தொல்பொருள் திணைக்களம்!

## மனோ கணேசன் எச்சரிக்கை

திருகோணமலை, மே 28

வடகிழக்கிலே இந்துக் கோயில்களைப் பாதுகாக்கின்றோம் என்று கூறி அவற்றை சிங்கள பௌத்த சின்னங்களாக காண்பித்து மீண்டும் ஒரு வன்முறைக்கான அழித்தத்தை இடும் வேலைகளையே தொல்பொருள் திணைக்களம் மேற்கொள்கின்றது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா, இந்துக்கோவிலை உடைத்து, அங்கு விகாரையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக, திருகோணமலை வாழ், தமிழ் இந்துக்களின் பாரம்பரிய மத, இன உரிமைகள் கபடத்தனமாக பறிக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கிலே இந்து கோயில்களை எல்லாம் அடையாளப்படுத்தி பட்டியல்படுத்தி அதனை பாதுகாக்கப்போகின்றோம் என்று கூறி, அவற்றை மறைமுகமாக சிங்கள பௌத்த சின்னங்களாக காட்டக்கூடிய இலக்கிலே இந்த திணைக்களம் செயற்படுகின்றது. இது நாட்டிலே மீண்டும் ஒரு வன்முறையை, பிரச்சினையை உருவாக்கும் செயற்பாடாகவே அமைகின்றது - என்றார். (ஒ.5)

பேசாலையில்
73 கிலோ கஞ்சா மீட்பு:

### இருவரைத் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்று அனுமதி

தலைமன்னார், மே 28

கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களில் இருவரை தடுத்துவைத்து விசாரணை செய்ய மன்னார் நீதிவான் மன்று பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

மூன்றாவது சந்தேகநபரை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் ரி.சரவணராஜா கட்டளை பிறப்பித்தார்.

மன்னார் பேசாலை உருத்திரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடத்திய திடீர் சோதனையில் 73 கிலோகிராம் கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் மீட்டிருந்தனர். (த-60)

### புர்காவை கழற்றச் சொன்னதால் பணியைத் துறந்த மருத்துவர்

கொழும்பு, மே 28

ஹோமாகம பிரதேசிய மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவரை, அவர் அணிந்துவந்திருந்த புர்காவை கழற்றும்படி பணித்தமையால் தனது மருத்துவத் தொழிலை விட்டு விலகிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, மருத்துவ அதிகாரி புர்கா அணிந்திருந்தமையின் காரணமாக, நோயாளரொருவர் அவரிடம் மருத்துவம் பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார். புர்காவை கழற்றிவிட்டு பணிக்கு வரும்படி மருத்துவமனையின் மூத்த மருத்துவ அதிகாரி சம்பந்தப்பட்ட மருத்துவரைப் பணித்திருந்தார்.

மருத்துவமனையிலிருந்து உடனே வெளியேறிய மருத்துவர், மே மாதம் 2ஆம் திகதி வரையில் மருத்துவமனைக்கு வருகைதராதிருந்த நிலையில், அன்றைய தினம் மருத்துவமனையின் மூத்த மருத்துவ அதிகாரிக்கு அலைபேசியின் மூலம் தொடர்புக் கொண்டு தனக்கு சுகவீனம் என்று அறிவித்துள்ளார்.

பின்னர் குறித்த மருத்துவமனையின் மூத்த மருத்துவ அதிகாரியான ஜே.ஹெட்டியாராச்சி இது பற்றி விளக்கமளிக்கையில், இச்சம்பவம் எமது வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளதோடு, அவர் சில நாள்கள் பணிக்கு வருகைதராதிருந்த நிலையில், தான் பணியிலிருந்து விலகிக் கொள்வதாக, கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளாரென்றும் எனினும் அந்தக் கடிதத்தை தாம் இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

### வற்றாப்பளை கண்ணகிக்கு எட்டாம் நாள் மடை நேற்று

முல்லைத்தீவு, மே 28

வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளைக்கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் எட்டாம்நாள் மடை நேற்றுத் திங்கட் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 20ஆம் திகதி விசாகப் பொங்கல் நடைபெற்றிருந்தது. நேற்றும் பக்தர்கள் அதிகளவில் வற்றாப்பளை அம்மனிடம் வந்திருந்தனர். பொங்கல் பொங்கிப் படையல் செய்து வழிபாடு நடத்தினர்.

படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (த-ரீ3)

### திருமண வைபத்தில் நடந்த மோசமான செயல்

கொழும்பு, மே 28

குருநாகலில் நடைபெற்ற திருமணத்தில் முஸ்லிம் சமையலாளர் சமைத்த உணவுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற திருமணத்தில் சமையலாளராக முஸ்லிம் ஈடுபட்டுள்ளார்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் உணவை புறக்கணித்துள்ளதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

திருமண நிகழ்வில் உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்களுக்காக மதிய உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விருந்தினர்கள் பலர் வீட்டிற்கு வந்த பின்னர், திருமண உணவை சமைத்தவர் முஸ்லிம் சமையலாளர் ஒருவரே சமைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் தம்பதியரை வாழ்த்தி விட்டு உணவைப் பெற்றுக் கொள்ளாமல் சென்றுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

# அடிப்படைவாத அமைப்புகளுக்குள்ளே நாங்கள் உளவாளிகளை அனுப்பினோம்!

## ஒப்புக்கொள்கிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, மே 28

தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடத்தும் அடிப்படைவாத அமைப்பின் குழுவுக்குள் எமது உளவாளிகளை அனுப்பி தகவல்களைப் பெறும் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தும் அடிப்படைவாத அமைப்பு எங்களது ஆட்சிக் காலத்தில் சிறிதளவில் செயற்பாடுகளை ஆரம்பித்தனர். அதன்போதே அவர்கள் தொடர்பில் தேடுவதற்கு ஆரம்பித்தோம். அவர்களின் குழுவுக்குள் எமது உளவாளிகளை அனுப்பி தகவல்களைப் பெற்று அந்தக் காலத்தில் செயற்பாடுகளை ஆரம்பித்தோம்.

உளவாளிகள் அவர்களது கடமைகளை செய்கின்றனர். அதற்கான கொடுப்பனவை வழங்க வேண்டும். அவ்வாறில்லையெனின், எந்தத் தகவல்களும் கிடைக்காது, என்றார்.

கேள்வி: எனினும், மகிந்த ராஜபக்சவின் அரசு எதிர்காலத்தில் நன்மை பெறுவதற்காக பல்வேறு குழுக்களை நிர்வகித்து வந்ததாக அரசிலுள்ள சிலர் கூறுகின்றனர். அவ்வாறானதொரு குழுவா இது?

பதில்: அவ்வாறான குழுக்களை நிர்வகிக்கவில்லை என்றால் உளவுத்தகவல்களை எவ்வாறு பெறுவது? உளவுத்தகவல்களை பெறுவதற்கு அந்தக் குழுக்களுக்குள்ளே ஆள்களை அனுப்ப வேண்டும். வேறு எப்படி செய்வதென்று எமக்குத் தெரியாது. அவ்வாறு நாம் நியமித்தவர்கள் வழங்கிய தகவலுக்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுத்தோம்.

இந்தத் தாக்குதல் திட்டம் குறித்து இந்தியா எமது பாதுகாப்புப் பிரிவுக்கு தகவல் வழங்கியிருந்தது. அது தீர்க்கதரிசனத்தால் வழங்கிய தகவலல்ல. அது அவர்களது உளவாளிகள் வழங்கிய தகவல். எமது உளவாளிகளும் அந்தக் குழுக்களில் தொடர்ந்தும் இருந்திருந்தால் எமது புலனாய்வு பிரிவுக்கும் நேரடியாக தகவல் கிடைத்திருக்கும். எமது காலத்தில் அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து வந்தோம். இந்த அரசு உளவுத்துறையை உதாசீனப்படுத்தியது - என்றார். (ஒ.5)

### காத்தான்குடியில் ஐ.எஸ். 63பேர் சந்தேகத்தில் சிக்கினர்

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடிப் பிரதேசத்தில் ஐ.எஸ்.ஐ. எஸ். தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை 63 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ.எஸ்.எஸ். தீவிரவாத அமைப்பின் வழிநடத்தலில் உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி காத்தான்குடியைச் சேர்ந்த ஸஹ்ரான் ஹாசீம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதையடுத்து காத்தான்குடி முழுவதும் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளின்போது கடந்த ஒரு மாத காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் 63 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் கூறினர். இவர்களில் பலர் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என்றும் காத்தான்குடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, காத்தான்குடிப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பினர் தொடர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றமை கு...

# வட பிராந்திய கடலில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 28

இலங்கையிலிருந்து 15 ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதாக வெளியான தகவல்களை அடுத்து, இலங்கை கடற்படை வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

15 ஐ.எஸ். தீவிரவாதிகள் இலங்கையிலிருந்து படகில் இலட்சதீவு நோக்கி பயணிப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து, இந்தியாவின் கேரள மாநில கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் இந்திய ஊடகங்களில் வெளியானதை அடுத்து இலங்கை கடற்படை மேலதிக போர்க்கப்பல்களை அனுப்பி வைத்திருக்கிறது.

'இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல. இது பற்றிய எந்த புலனாய்வு எச்சரிக்கைகளும் இலங்கை கடற்படைக்கு கிடைக்கவில்லை. இந்தியா அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். அத்துடன், வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச விழிப்பு நிலையில் கடற்படையினர் உள்ளனர்' என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# தேடுதல் வேட்டை 23பேர் சிக்கினர்

கொழும்பு, மே 28

கொழும்பு நாரஹேன்பிட்டிய பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் நடத்திய தேடுதலில், பெண் ஒருவர் உள்ளிட்ட 23 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காலை 7 மணி தொடக்கம், பிற்பகல் 3 மணிவரை இந்த தேடுதல்கள் நடத்தப்பட்டன.

தேடுதல்களின் போது, 15 கிலோ வெடிமருந்துகள், ஆறு காட்டுக் கத்திகள், இராணுவத் தொப்பிகள், 14 துப்பாக்கிரவைகள், 29 அலைபேசிகள், பல தொடர்பாடல் கருவிகள், மற்றும் போதைப் பொருட்கள் உள்ளிட்டவை ஐந்து வீடுகளில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

**சி4 வெடிமருந்து**

அனுராதபுரத்தில் நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின் போது, தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் சி4 வெடிமருந்துடன் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுர, மத்துகம பகுதியில் உள்ள இஸ்லாமிய மதப் பாலர் பாடசாலை ஒன்றில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். அங்கிருந்து, 168 கிராம் சி4 வெடிமருந்து, டெற்றனேற்றர்கள் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாத பரப்புரை வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, பாலர் பாடசாலைக்கு பொறுப்பானவரும், மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர். மற்றொருவர் தேடப்பட்டு வருகிறார். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இந்த தேடுதல் நடத்தப்பட்டது.

தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட குருநாகல் மருத்துவமனையின் மருத்துவர் மொகமட்டுடன் தொடர்புடைய மேலும் பலர் மருத்துவமனையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் மேலும் சில சந்தேக நபர்கள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ.5)

# நில்வள கங்கை துப்புரவு



கொழும்பு, மே 28

மாத்தறை மாவட்டத்தின் நில்வள கங்கைக்கு அருகாமையிலுள்ள தாழ்நில பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் பல ஆண்டுகளாக சிறு மழைக்கும் வெள்ளப்பெருக்கால் தொடர்ச்சியாக பாதிப்படைந்து வருகின்றார்கள்.

அடிக்கடி ஏற்பட்ட வெள்ள நிலை காரணமாக குப்பைகள் தேங்கிக்கிடந்த நில்வள கங்கையின் மேற்புறத்தை தூய்மையாக்கும் பணிகள் நேற்று முன்தினம் முற்பகல் தலைமை அமைச்சர் அலுவலக பிரதானி, துறை முகங்கள் மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரும், மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாகல ரத்னாயக்க தலைமையில் முன்னெடுக்கப் பட்டது.

நில்வள கங்கையின் மேற்புர வெள்ள கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் மொரவக்க பரகல பாலத்தை சுற்றியுள்ள பகுதி தூய்மையாக்கப்பட்டது. மொரவக்க பொலிஸ் அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்களும் இப்பணிகளில் இணைந்தனர். (ஒ.5)

# ஒரு தொகை தே.அ.அ.மீட்பு

கொழும்பு, மே 28

வெலிமட, திமுதுகம பிரதேசத்திலிருந்து ஒரு தொகை தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்த நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

51 தேசிய அடையாள அட்டைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டிக்குப் பணம் கொடுத்துவருவதாகவும், வட்டியைப் பெற்றுச் செல்லும் நபர்களிடமிருந்து அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக்கொள்வதாகப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது கைதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# அரச தலைவர் ஆணைக்குழு பதவிக் காலம் நீடிக்கப்பட்டது

கொழும்பு, மே 28

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், வரையறுக்கப்பட்ட சிறிலங்கா கேடரிங் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மிகின் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகளை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக்காலமே நீடிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிப்பதற்கான அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் குறித்த நிறுவனங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகள் குறித்து கண்டறிவதற்காக அரச தலைவர் மைத்திரிபாலவால் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி நிறைவடையவிருந்த ஆணைக்குழுவின் காலம் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் மீண்டும் அந்தக் காலம் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டு பின்னர் மே மாதம் 30 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது. (ஒ.5)

# குருநாகல் மருத்துவரை தூக்கிலிட வேண்டும்

## ஐ.தே.க. எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மே 28

குருநாகல் போதனா மருத்துவமனையில் கைது செய்யப்பட்ட மருத்துவரை தூக்கிலிட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.மரிக்கார் தெரிவித்தார்.

வெல்லம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற கிராம எழுச்சித் திட்ட நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாத் பதியூதின் தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு அரசதலைவருக்கு உண்டு. குருநாகலில் கைது செய்யப்பட்ட மருத்துவர் அதிகளவு சொத்துக்களை சம்பாதித்த குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

அறுவை சிகிச்சை தொடர்பாகவோ, தாய்மார்களுக்கு தவறான சிகிச்சை செய்தமைக்காகவோ அவர் கைது செய்யப்படவில்லை. அதனால் குறித்த மருத்துவரை தூக்கிலிட வேண்டும். இதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை - என்றார். (ஒ.5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு முஸ்லிம்களின் ஆதரவு இல்லை

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதம் தலைதூக்க முடியாதளவுக்குப் புதிய முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் அந்த அமைப்புக்கு ஆதரவானவர்கள் அல்ல. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிவில் சமூக மற்றும் தொழிற்சங்க ஒன்றிணைப்பின் உறுப்பினர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரபுநாடுகள் சிலவற்றில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு பொது மக்களின் ஆதரவு உள்ளது. இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு எவ்வித ஆதரவும் இல்லை. அடிப்படைவாத செயற்பாடுகளை மேற்



கொண்டு அவர்களுக்கு ஆதரவை ஏற்படுத்தினால் நாட்டில் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டு விடும் - என்றார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்னர் நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பிலும், அந்த தாக்குதலை தவிர்ப்பதற்கு தவறியமை தொடர்பில் அரசியல் மற்றும் நிறுவனங்களின் பொறுப்புக்கள் தொடர்பில் சிவில் சமூக மற்றும் தொழிற்சங்க ஒன்றிணைப்பின் உறுப்பினர்கள் தலைமை அமைச்சரிடம் காரணங்களைக் கேட்டறிந்து கொண்டனர். (ஒ.5)

# அசாதாரண சூழலை கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை

## ம.உ. ஆணைக்குழு பொலிஸுக்கு கடிதம்

கொழும்பு, மே 28

வடமேல் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்த இதுவரையில் உரிய நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியர் தீபிகா உடுகமவின் கையெழுத்துடன் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் பயணம் மேற்கொண்டு அந்தப் பகுதியில் உள்ள பிரதேசவாசிகள், மதத்தலைவர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை சந்தித்திதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# யாருக்கும் அஞ்சி பதவிதுறக்க நான் ஒருபோதும் தயாரில்லை

## ரிசாத் ஆவேசம்



கொழும்பு, மே 28

எந்தவித குற்றமும் செய்யாத என்னைப் பதவி விலகுமாறு கூறுவதை ஏற்க நான் தயாரில்லை. எனக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ள நான் தயார். இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரிவித்தார்.

கடந்த 2014, 2015ஆம் ஆண்டுகளில் அமைச்சராக இருந்த காலங்களில் அரிசி இறக்குமதியில் செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டில் விசாரணைகளுக்காக அமைச்சர் ரிசாத் பதியூதீன் நிதிக் குற்ற விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணை முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்கள் இன்று என்னை தவறான வகையில் சித்தரிக்க முயற்சித்து வருகின்றன. என் மீது எந்த தவறும் இல்லாத நிலையில் என்னைக் குற்றவாளியாக காட்டவே முயற்சிக்கின்றனர். சிலர் என்னை பயங்கரவாதி என்றே கூறும் நிலைமை உருவாகியுள்ளது.

இன்று எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளனர். நான் பதவி விலக வேண்டும் எனவும் இவர்கள் கூறுகின்றனர். நான் எந்த தவறும் செய்யாத நேரத்தில் குற்றச்சாட்டை ஏற்க நான் தயாரில்லை. அதேபோல் இவர்களுக்கு அஞ்சி நான் எனது அமைச்சை துறக்கவும் தயாரில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரட்டும். நான் அதற்கு முகம்கொடுக்க தயாராக உள்ளேன். என்னால் எந்த குற்றமும் இடம்பெறாத நிலையில் நான் தைரியமாக அதற்கு முகம்கொடுக்க தயாராக உள்ளேன். நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் நான் சாட்சியமளிக்க தயாராக உள்ளேன். என்னை நியாயமானவன் என்று நிரூபிக்க என்னால் முடியும்.

எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே அடிப்படை நியாயமற்றதாகவே உள்ளன. குறிப்பாக நான் இராணுவத்தளபதியை தொடர்புகொண்டு அழுத்தம் கொடுத்ததாக கூறுவது முற்றிலும் பொய்யானது. அதனை இராணுவத்தளபதியே கூறியுள்ளார்.

மேலும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நான் ஒருநாளும் துணைபோனவன் அல்ல. நான் கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச ஆட்சியிலும் அமைச்சராக செயற்பட்டுள்ளேன். அப்போது என்னுடன் இணைந்து செயற்பட்ட நபர்கள் தான் இன்று தமது அரசியல் சுய லாபங்களை கருத்திற்கொண்டு எனக்கெதிராக செயற்பட ஆரம்பித்துள்ளனர். யார் அழுத்தம் கொடுத்தாலும் என்மீது குற்றம் இல்லாத நிலையில் அனைத்து சவால்களையும் தைரியமாக முகம்கொடுக்கத் தயார் - என்றார். (ஒ.5)

# ரிசாத்துக்கு எதிராக உடனடி நடவடிக்கைகள் சாத்தியமில்லை

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத, அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க முடியாதென அமைச்சர் ஹரிசன் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஹரிசன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களுக்குள் மாறுப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. கத்தோலிக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர் இவ்வாறான நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது.

எவ்வாறாயினும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் ஒருசிலர் முடிவெடுத்துவிட முடியாது. மாறாக, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலேயே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

அமைச்சர் ரிசாத் பதியூதீன் குற்றமிழைத்திருந்தாலோ, அதற்கான சாட்சிகள் இருந்தாலோ பொலிஸில் முறைப்பாடளிக்க முடியும். இல்லையென்றால் நீதிமன்றத்தை நாட முடியும். ஆனால், இதுவரை அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத ஒருவர் தொடர்பில் எம்மால் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சியினர் இந்தச் சம்பவத்தை பயன்படுத்தி, எப்படியாவது அரசியல் இலாபம் தேடவே முயற்சித்து வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை அரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கமாகும். மகிந்த உள்ளிட்ட எதிரணித் தலைவர்கள், அமைச்சர் ரிசாத்தை தங்களுடன் ஒருபோதும் இணைத்துக் கொள்ளப்போவதில்லை என்ற உறுதிப்பாட்டை வழங்குவார்களா?

நாட்டு மக்களுக்கு இந்த உறுதிப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்துவார்களா? இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி என்பது அனைத்து இனங்களுக்கும் உரிய ஒரு கட்சியாகும். அமைச்சர் ரிசாத் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால், நாம் நிச்சயமாக அதுதொடர்பில் நடவடிக்கை எடுப்போம். இந்த விடயம் தொடர்பில் தற்போது தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவில் சுயாதீனமாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதைவிடுத்து இதில் அரசியல் இலாபம் தேட முனையக்கூடாது - என்றார். (ஒ.5)

# அமெரிக்கா - இலங்கை உடன்பாடு நாட்டின் இறைமையை பாதிக்காது

## மைத்திரி தடைபோட்ட ஒப்பந்தம் தொடர்பில் அமெ. தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

முன்மொழியப்பட்டுள்ள சோபா எனப்படும் படைகளின் நிலை உடன்பாட்டால் இலங்கையின் இறைமைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

'இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சோபா உடன்பாடு, இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்புஉள்ளிட்டவிடயங்களுடனேயே தொடர்புடையது. இதனால் இலங்கையின் இறைமைக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. இந்த உடன்பாடு இன்னமும் கையெழுத்திடப்படவில்லை.

இரண்டு நாடுகளும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன. இரு நாடுகளும் உடன்பாட்டுக்கு வந்தால், அது இணையத்தளத்தில் வெளியிடப்படும். இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு நடக்கும்,முறை தொடர்பாக உடன்பாட்டின் உட்பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகள் இலங்கைக்கு வருகை தருவது தொடர்பாக, இலங்கை அரசு மற்றும் இராணுவத்துடன் கலந்துரையாடப்படும். 1995ஆம் ஆண்டு இரண்டு நாடுகளும் செய்து கொண்ட உடன்பாடு தற்போது காலாவதி ஆகிவிட்டது. அது நவீன காலத்துக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டியுள்ளது. எந்தப்பிரச்சினையாக இருந்தாலும், வெளிப்படையாக கலந்துரையாடி இணக்கம் காணப்படும். உடன்பாடு விடயத்தில் இரு தரப்புகளுக்கும் சரியான புரிதல் இருந்தால், பிரச்சினைகளை குறைக்க முடியும். வெளிப்டைத்தன்மையுடன் உடன்பாட்டை எட்ட முடியும் என்று இரண்டு நாடுகளின் அரசுகளும் நம்பிக்கை கொண்டுள்ளன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன், நெருங்கிய ஒத்துழைப்பை கட்டியெழுப்புவது, உள்ளிட்ட பல்வேறு உடன்பாடுகளை அமெரிக்கா செய்திருக்கிறது. இந்த உடன்பாடுகள் ஒருபோதும் அந்த நாடுகளின் இறைமைக்கு அச்சுறுத்தலாகவோ தலையீடுகளைச் செய்வதாகவோ இருந்ததில்லை. இலங்கை, அமெரிக்க ஆயுதப் படைகளுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன. இலங்கைப் படைகளின் செயற்பாடுகள் ஒரு தனி நாட்டுக்குள்ளேயே வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், அமெரிக்கப் படைகள் உலகின் பல பகுதிகளில் உள்ளன.

அமெரிக்கப் படைகள் பயிற்சிகளுக்காக இலங்கைக்கு வருவதானால், உடன்பாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக மட்டுமே செயற்பட முடியும். அண்மைக் காலத்தில் 'அடிப்படைவாதக் குழுக்கள் பல்வேறு நாடுகளினதும் எதிர்காலத்துக்கும் பொதுவான அச்சுறுத்தலாக மாறியுள்ளன. இத்தகைய குழுக்களால் பாதிக்கப்பட்ட எல்லா நாடுகளுக்கும் அமெரிக்கா உதவியுள்ளது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தொடர்பில் அமெரிக்காவுடன் எந்தவொரு உடன்பாட்டிலும் தனக்குத் தெரியாமல் கையெழுத்திடுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் தலைமையிலான அரசுக்கு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# நடனம், இசை. யோகாவுக்கு விண்ணப்பிக்க முடியும்

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் 2019/20 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் மேல்நிலை மட்டங்களில் கிற்றார், வயலின், தபேலா, கர்நாடக இசைப் பாட்டு, பரதநாட்டியம், கதக் மற்றும் யோகா பாடநெறிகளில் தற்போது மாணவர்களை அனுமதிக்கிறது. புதிய வகுப்புக்கள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

இலங்கையின் இசைவல்லுநர்கள் மற்றும் மேதைகளான கலாநிதி. நிர்மலகுமாரி (சித்தார்), சோமசிரி இளேசிங்க (வயலின்), ரங்க பெரேரா (தபேலா), கலாநிதி. அருந்ததி சிறிரங்கநாதன் (கர்நாடக இசைப்பாட்டு), சுபாஹினி பத்மநாதன் (பரதநாட்டியம்), வாசுகி ஜகதீஸ்வரன் (பரதநாட்டியம்), மோக்ஹி சமரசூரிய (கதக்) மற்றும் வியாசா கல்யாணசுந்தரம் (யோகா) ஆகியோர் வகுப்புகள் நடத்துவர். மேலதிக விவரங்களை 011 2684698 என்ற இலக்கம் அல்லது iccrcolombo2@gmail.com என்ற தளத்தில் பெறலாமென ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (து)

# தமிழர் மீது அக்கறையிருந்தால் கெடுபிடிகளை நிறுத்துங்கள்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், மே 28

தமிழ் மக்கள் யாரேனும் அரசிடமோ அல்லது படையினரிடமோ பாதுகாப்புக் கேட்டார்களா? தமிழ் மக்கள் மீது பாசம் திடீரென்று எங்கே இருந்து உங்களுக்கு வந்தது? ஆடு நனைகிறது என்று ஓநாய் ஏன் அழவேண்டும்?. உண்மையிலேயே தமிழ் மக்கள் மீது உங்களுக்கு அக்கறை இருந்தால் வீணான பதற்றத்தைத் தோற்றுவிக்காமல் சோதனைக் கெடுபிடிகளைத் தளர்த்துங்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குண்டு வெடித்தது கொழும்பில். ஆனால் சோதனைக்கெடுபிடிகளோ வடக்கில்.

குண்டு வெடிப்பு நடைபெற்ற கொழும்பு மற்றும் பிற இடங்கள் அனைத்தும் சீர் செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு ஆயுத வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டு சுமூக நிலைக்கு நாடு திரும்பியுள்ளதாக அரசு மற்றும் அமைச்சர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் தகவல்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிக்கு வீதி சோதனைச்சாவடிகள் எதற்காக?. வீட்டுக்கு வீடு சுற்றி வளைப்புகள் எதற்காக?. ஆங்காங்கே மீட்கப்படும் துருப்பிடித்த வாள்கள், வெடிக்காத குண்டுகள் அனைத்தும் இராணுவத்தினருடையவை. மக்களைப் பதற்ற நிலையில் வைத்திருப்பதற்காகப் படையினருடன் சேர்ந்து அரசே இவற்றை மேற்கொள்கிறதா? என்றும் சந்தேகம் மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது என்று தெரிவித்தனர்.

சிறுபான்மைச் சமூகத்தினரை அச்சுறுத்தி மீண்டும் அடையாள அட்டைக் கலாசாரத்தை இந்த அரசு தோற்றுவித்துள்ளது. இவ்வாறான நிலமை எதிர்காலத்தில் நல்லாட்சி அரசின் மீது அதிருப்தியைத் தோற்றுவிக்கும். அவசரகாலச்சட்டம் போர்க்கால அச்சுறுத்தல்களை தமிழ் மக்கள் நன்கறிந்துள்ளனர். தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்தச் செயற்பாடுகளை அரசு அப்படியே இஸ்லாமிய அப்பாவிப் பொதுமக்கள் மீது திருப்பியுள்ளது. மக்கள் மீதான கெடுபிடிகளை நிறுத்தி தமிழ் பேசும் மக்கள் அச்சமில்லாது வாழ்வதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (து-213)

# எவராலும் தமிழ்பேசும் மக்களை இனிமேலும் பிரிக்க முடியாது!

## யாழ். முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணத்தில் சிறுபான்மை மக்களாக இருக்கின்ற நாம் தமிழ் மக்களோடு இணைந்து ஒற்றுமையாக, ஐக்கியமாக வாழவே விரும்புகின்றோம். ஆனால் சில இனவாத ஊடகங்கள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் பிரிவுகளையும், பிளவுகளையும் உருவாக்கவே விரும்புகின்றன. யார் நினைத்தாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்பேசும் மக்களை எவராலும் பிளவுபடுத்த முடியாது என்பதை நாம் ஆணித்தரமாக உறுதிபடக் கூறிவைக்க விரும்புகின்றேன் என்று யாழ்ப்பாண முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதி என்.எம்.அப்துல்லாஹ் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் குறித்து விளக்கமளிக்கும் யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் ஊடகவியலாளர் மாநாடு கடந்த சனிக்கிழமை, மானிப்பாய் வீதி மொஹிதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது. குறித்த மாநாட்டின் போது கலந்து கொண்ட அப்துல்லாஹ் யாழ்ப்பாணம் மாவட்ட பொது சிவில் அமைப்புக்கள் சார்பில் அங்கு கருத்துவெளியிட்டிருந்தார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினையும், அவர்களின் இந்தப் பயங்கரவாதத் தாக்குதலையும் யாழ்ப்பாண, கிளிநொச்சி முஸ்லிம்கள் வண்மையாக கண்டிப்பதோடு, எமது எதிப்பையும் உறுதிபடக் கூறிநிற்கின்றோம். எந்தவொரு சமயமும் பயங்கரவாதத்தை ஆதரிப்பது கிடையாது. அதுபோல இஸ்லாம் மார்க்கமும் இதனை ஏற்றுக்கொள்ளவோ, ஊக்குவிக்கவோ இல்லை. மாறாக அன்பையும், சமாதானத்தையுமே எமது மார்க்கம் போதிக்கின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் செயற்பாடுகளையும், அவர்களது கொள்கைகளையும், முஸ்லிம்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் அவர்களுக்கு எதிரானவர்கள் என்பதை பதிவுசெய்து கொள்கின்றேன்.

இன்றைய மாநாட்டில் ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து எமது பார்வையைதெளிவுபடுத்துவது மிகமுக்கியமாகும். ஏப்ரல் 21ஆம் திகதியின் பின்னர் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் யாழ்ப்பாண முஸ்லிம்கள் குறித்து சில உறுதிப்படுத்தப்படாத செய்திகளையும், முரண்பாடான செய்திகளையும் வெளியிட்டிருந்தமை கவலையளிக்கின்ற விடயமாக இருந்து கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் சிறுபான்மை மக்களாக இருக்கின்ற நாம் தமிழ் மக்களோடு இணைந்து ஒற்றுமையாக, ஐக்கியமாக வாழவே விரும்புகின்றோம். ஆனால் சில இனவாத ஊடகங்களின் செயற்பாடுகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் பிரிவுகளையும், பிளவுகளையும் உருவாக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

குறிப்பிட்ட குழுவினர் செய்த இவ்வாறான இழிவான கீழ்த்தரமான செயலைக் கொண்டு முழு முஸ்லிம் சமூகத்தையும் குறிவைத்து தாக்குவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, மேலும் இனிவரும் காலங்களில் தமிழ் முஸ்லிம் சமூகம் இரு தரப்பிலிருந்தும் இன ஐக்கியத்துக்கும் ஒற்றுமைக்கும் வழிசெய்கின்ற வகையில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்புபோல் செயற்படுத்த வேண்டும். ஊடகங்கள் தமது செயற்பாடுகள் தொடர்பில் தம்மை மீள் பரிசீலனை செய்து கொள்ள வேண்டும். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலே எமது உள்ளங்களில் உள்ள கவலைகளை ஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் செயற்பாட்டுடன் தொடர்புடையவர்களை ஒட்டுமொத்தமாக எல்லோரும் இணைந்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். அதற்கு முஸ்லிம்கள் தயாராகவே இருக்கின்றார்கள். யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஆகிய நாம் தமிழ் ஊடகங்களையே நம்பியிருக்கின்றோம். எமது ஊடகங்களாக நாம் நம்பியிருக்கின்ற நீங்கள் எதிர்காலங்களில் முஸ்லிம் சமூகம் குறித்து வருகின்ற செய்திகள் குறித்து எமது உலமாசபையினருடனோ, சமூக அமைப்புக்களுடனோ, மக்கள் பிரதிநிதிகளுடனோ, கதைத்து கலந்துரையாடியதன் பின்னர் உண்மையான செய்திகளை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தங்களை நம்பியிருக்கின்ற எமது சமூகம் சார்பில் சமூகத்தின் பிரதிநிதியாக இந்தத் தயவான வேண்டுகோளை முன்வைக்கின்றேன் - என்றார். (ம-21)

# தேவாலயங்களுக்குள் கொல்லப்பட்டவர்கள் வேதசாட்சிகளாக அறிவிப்பு

கொழும்பு, மே 28

உயிர்த்த ஞாயிறன்று தேவாலயங்களுக்குள் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள் தியாகிகளாக அறிவிக்கப்படவுள்ளனர்.

கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இதனை தெரிவித்துள்ளார்.

பொரளையில் உள்ள தேவாலயத்தில் நடத்திய சிறப்பு வழிபாட்டில் கர்தினால் மல்கம் ரஞ்சித் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

'சமயம் என்பது வாழ்க்கை. தமது சமய நம்பிக்கையாலேயே இவர்கள் கொல்லப்பட்டார்கள், தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு, வாழ்க்கையின் பெறுமானம் தெரியவில்லை' என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டார். (ஒ.5)

# முள்ளிவாய்க்கால் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் டென்மார்க்கில்




கொழும்பு, மே 28

முள்ளிவாய்க்கால் மண்ணில் இலங்கை அரசு பல்லாயிரக்கணக்கான மக்களை உயிர்ப்பலி கொண்ட முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் தமிழின அழிப்பின் 10ஆம் ஆண்டுவணக்க நிகழ்வு டென்மார்க் றணாஸ் நகரில் உணர்வுபூர்வமாக கடந்த சனிக்கிழமை நினைவு கூரப்பட்டது.

நிகழ்வு பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமாகி தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து முள்ளி வாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் இறுதிவரை மண்டியிடாது போராடிய மாவீரர்களுக்கு ஈகச்சுடரேற்றப்பட்டு மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. மக்கள் மலர் தூவி, சுடரேற்றி வணக்கம் செலுத்தினர். அதனைத்தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு மேடை நிகழ்வுகள் தொடங்கின.

அரங்க நிகழ்வுகள் எழுச்சிக் கானங்களோடு ஆரம்பமாகின. முள்ளிவாய்க்கால்மண்ணில் மக்கள் பட்ட துன்பங்களை வெளிப்படுத்தும் கவிதைகள், எழுச்சி நடனங்கள், பேச்சு, சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

மக்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவு இன்றி, மருத்துவ உதவி இன்றி, மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் வாழ்ந்தார்கள். இத்தகைய மனித அவலங்கள் எதனையும் கருத்தில் கொள்ளாது தொடர்ச்சியான வானூர்தித் தாக்குதல், எறிகணைத் தாக்குதல், இரசாயன எரிகுண்டுத்தாக்குதல் என இலங்கை அரசபடைகளால் திட்டமிட்டுப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு வந்தன. இவ்வளவு அவலங்களுக்குப் பின்னால் நாம் சோர்ந்து போகக் கூடாது. எமக்கான விடுதலையை பெற்றுக்கொள்வதற்கு நாம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். தமிழர்களின் தேசம் விடுதலை பெறும்வரை ஓய்ந்து போகக் கூடாது. அனைவரும் ஒன்றிணைந்து எமது விடுதலைப்பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

வணக்க நிகழ்வின் இறுதியாக 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' என்ற பாடல் இசைக்கப்பட்டது. பின்பு தேசியக்கொடி இறக்கப்பட்டு "தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தமிழர்களின் தாரக மந்திரத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (து)

# இலங்கையில் குண்டுதாரிகளென கோத்தாவுக்குத் தெரிந்திருந்தது!

யாழ்ப்பாணம், மே 28

நாட்டில் குண்டுத் தாக்குதல்கள் நடத்திய அமைப்பினர் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இலங்கையில் உள்ளனர் என்று கூறியுள்ளோம். இந்த விடயம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாஜ ராஜபக்சவுக்கும் தெரியும்.

இவ்வாறு ஜம்இய்யித்துல் உலமா சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கிளைத் தலைவர் எஸ்.சுபியான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பள்ளிவாசலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்ய வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் எமது இனத்தின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க எம்மிடம் பலமான அரசியல் தலைமைகள் உள்ளனர்.

நாட்டில் வாழும் முஸ்லிம்களாகிய நாம் முழுமையான சுதந்திரத்துடன் வாழ்ந்து வருகின்றோம். எமக்குத் தேவையான விடயங்களை நாம் இலங்கை அரசிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றோம். எமது உரிமைகள் சார்ந்த விடயத்தில் குரல் கொடுக்க எம்மிடம் சரியான முஸ்லிம் அரசியல் தலைமைகள் உள்ளனர். அவர்கள் கடந்த காலங்களில் எமக்காகப் பல விடயங்களை அரசுடன் பேசி பெற்றுத் தந்துள்ளனர்.

தற்போது முஸ்லிம் இனத்தின் பெயரால் நாட்டில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இந்தத் தாக்குதல்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. இதனை அரசும் பாதுகாப்புத் தரப்பினரும் பல தடவைகள் கூறியுள்ளனர். நாம் ஆரம்ப காலத்திலிருந்து பயங்கரவாதத்துக்கு எதிரானவர்கள். இந்த நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு முஸ்லிம் சமூகத்தினர் காட்டிக் கொடுத்துள்ளனர். பிடித்தும் கொடுத்துள்ளனர். இதனை அனைவரும் அறிவார்கள். நாம் வன்முறையாளர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்புத் தரப்பினருக்குக் காட்டிக் கொடுப்போம். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளோம். எமது பகுதிகளில் யாராவது பயங்கரவாதி இருந்தாலும் நாம் உடனடியாகக் காட்டிக் கொடுப்போம் என்று உறுதிமொழி கொடுத்துள்ளோம்.

நாட்டில் குண்டுத் தாக்குதல்கள் நடத்திய அமைப்பினர் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இலங்கைக்குள் உள்ளனர் என்று கூறியுள்ளோம். இந்த விடயம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாஜ ராஜபக்சவுக்கும் தெரியும். எனவே இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களைத் திட்டமிட்ட வகையில் பொய்யான பரப்புரைகளைக் கூறி வதைக்கின்றனர். அவற்றை அவர்கள் நிறுத்த வேண்டும் - என்றார்.

குண்டுத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களில் சிலருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் தொடர்புள்ளது என்று முன்னர் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். (து-ரி1)

# 20.8 மெட்ரிக் தொன் தேயிலை ஏற்றுமதி

கொழும்பு, மே 28

கடந்த மாதம் 20.8 மெட்ரிக் தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

தேயிலை தரகு தரப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு 15.6 சதவீதம் ஏற்றுமதி வளர்ச்சியை எட்டியுள்ளது. வளர்ச்சி வீதம் எதிர் காலத்தில் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5)

# குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு யாழ், கிளிநொச்சி முஸ்லிம்களும் நிதியுதவி

யாழ்ப்பாணம், மே 28

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களும் தங்கான நிதியுதவிகளை செய்ய முன்வந்துள்ளனர். இந்த நிதி பாதிக்கப்பட்டவர்களிடம் கையளிக்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஜம்இய்யதுல் உலாமா சபையின் தலைவர் ஸ்.ஏ.பி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமாசபையின் ஏற்பாட்டில் இந்த நிதிசேகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தொழுகையின் பின்னால் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமா சபையினர் நிதிசேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வர்தகர்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தனிப்பட ரீதியில் நிதிகளைச் செலுத்தியுள்ளனர். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாசபையின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம்களிடம் இருந்து நிதி சேகரிக்கப்படுகிறது. அந்த நிதி தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது என்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஸ்.ஏ.பி.ஏ.எஸ்.சுபியான் மேலும் தெரிவித்தார். (ம-21)



# அணு ஆயுதத்தை கைவிட முடியாது

## வட கொரியா தெரிவிப்பு

பியோங்ஜாங், மே 28

வடகொரியாவின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கும், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த திங்கட்கிழமை வடகொரியாவின் தலைநகர் பிஜோங்யாங்கில் இடம் பெற்றதாகப் பன்னாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இந்தச் சந்திப்பில் வடகொரியா அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கைவிட வேண்டும், அது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சட்டங்களை மீறுவதாக அமைந்துள்ளது என்பதை ஜோன் போல்டன் வலியுறுத்தியதாகவும் அதற்குப் பதில் அளித்த வட கொரிய அதிகாரிகள், அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கை விடுவது எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகிவிடும் என மறுப்புத் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களைக் கொரியாவின் செய்தி நிறுவனம் ஒன்றே வெளியிட்டதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டுகின்றது. ஜப்பானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கின்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் செய்தியாளர்கள் இது சம்பந்தமாகக் கேள்வியொன்றை எழுப்பியபோது "வடகொரியா சிறிய ஏவுகணைகளைத்தான் பரிசோதித்துள்ளது அதையிட்டு அதிக கவனம் செலுத்தவேண்டியதில்லை, கிம்ஜோங் உன் எனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார் என நான் நம்புகிறேன்" என்று அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

## கொங்கோவில் பரிதாபம்


# படகு கவிழ்ந்து 30 பேர் சாவு


ஹின்சஷா, மே 28

ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஏரி ஒன்றைக் கடக்க முற்பட்ட படகு ஒன்று விபத்துக்குள்ளானது. கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது. இந்த விபத்தில் 30 பேர் சாவடைந்தனர். பயணம் செய்தவர்களில் பலர் காணாமல் போயுள்ளனர்.


180 பேர் பயணிக்கக்கூடிய குறித்த படகில் 350 பேர் பயணித்துள்ளனர். அதிகளவில் பயணிகளை ஏற்றியமையே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இறந்தவர்களில் 12 பெண்கள், 11 குழந்தைகளும் அடங்குகின்றனர். சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணி தொடர்ந்து நடக்கிறது. சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குக் குடியேற முயற்சித்தவர்கள் இவர்கள் என்றும், இவ்வாறு முயற்சிப்பவர்கள் பாதுகாப்பற்ற படகுப் பயணங்களை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொங்கோவில் நடந்துவருகின்ற உள்நாட்டுப்போரால் அங்குள்ள மக்கள் நாட்டிலிருந்து வெளியேற முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








ஜப்பானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கா அதிபர் ட்ரம்புக்கும் அவருடைய மனைவி மெல்னிய ட்ரம்புக்கும் ஜப்பான் பெரு வரவேற்பளித்தது. விருந்துபசாரம், கண்காட்சிகள், கண்கவர் நிகழ்வுகள் என்று பலதையும் இந்தப் பயணத்தின்போது ட்ரம்ப் தம்பதியருக்கு ஏற்பாடு செய்தது ஜப்பான். ஜப்பானில் நடந்த 'சுமோ' போட்டி வெற்றியாளருக்குச் சம்பியனை வழங்கினார் ட்ரம்ப். ஜப்பானின் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார் மெலனியா ட்ரம்ப்.





# இன்றைய நாள்

**மேடம்:** செய்ய வேண்டிய பணிகளுக்கான முன்னேற்பாடுகளை செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**இடபம்:** உறவினர் செய்த உதவிக்கு மறு உபகாரம் செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** திறமையுடன் செயல்படுவதால் பணி நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். அதற்கேற்ப பணவரவும் உண்டு.

**கடகம்:** சுயகவுரவத்திற்கு குறை வராமல் நடந்து கொள்வது அவசியம். குடும்ப உறுப்பினர் இயன்ற அளவில் உதவுவர். தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாக சரிசெய்வது நல்லது. சுமாரான பணவரவு உண்டு.

**சிம்மம்:** நண்பரிடம் கலை ரசனையுடன் பேசுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். உற்பத்தி, விற்பனை இலக்கு குறித்த காலத்தில் பூர்த்தியாகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** வெகுநாள் திட்டமிட்ட காரியம் நிறைவேற நண்பரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். சராசரி பணவரவுடன், நிலுவைப் பணமும் வசூலாகும்.

**துலாம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம். குடும்பத்திற்கான பணச் செலவு அதிகரிக்கும். உடல்நலம் ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** சிலர் தேவையற்ற ஆலோசனை சொல்வர்; உங்களுடைய சுயமான முடிவே நற்பலனை தரும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

**தனுசு:** எதிரியின் சதி செயலிழந்து போகும். பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** குணம் கெட்ட ஒருவருக்கு உதவி செய்து பின்னர் மனம் வருத்தம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் பணிபுரிவது அவசியம்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் காணப்படும்.

**மீனம்:** உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகலாம்; உண்மை, நேர்மையை கடைப்பிடிக்கவும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.



## ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகள் மூவருக்கு சாவுத் தண்டனை

பக்தாத்,மே 28

சிரியாவிலிருந்து செயற்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்திருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 3 பேருக்கு ஈராக் நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்தது. சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிப் போரிட்டு வந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளை அமெரிக்காவின் உதவியுடன் சிரியா அரசு ஒடுக்கியது. பலர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் அண்டை நாடான ஈராக்கிடம் ஒப்படைக்கப்பட்டனர். சிரியாவால் ஈராக்கிடம் ஒப்படைக்கப்பட்டவர்களில் 12 பேர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு எதிராக பாக்தாத் நகரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கெவின் கோனோட், லியோனார்ட் லோபெஸ், சலிம் மச்சாவ் ஆகிய மூவருக்கே சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அணுத் திட்டங்களை மக்களே தீர்மானிப்பர்

### ஈரான் அதிபர் அதிரடி



தெஹ்ரான்,மே 28

*ஈரான் அரசின் அணு உற்பத்தித் திட்டங்கள் தொடர வேண்டுமா, இல்லையா? என்பது தொடர்பாக ஈரான் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என அந்த நாட்டு அதிபர் ஹசன் ரவுகானி தெரிவித்தார்.*

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி இவ்வாறு தெரிவித்தார்.

"2004ஆம் ஆண்டளவில் அமெரிக்க அரசுடன் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னதாகவே இது தொடர்பாக நாட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என நான் வலியுறுத்தி இருந்தேன். அதற்கு ஹயாத்துல்லா கமேனியும் சம்மதம் தெரிவித்தார். இதைப்போன்ற ஒரு பொது வாக்கெடுப்பு எந்நேரத்திலும் நமக்கு சிறந்த தீர்வை அளிக்கக் கூடியதாக அமையும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

**பின்னணி**

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. தனது நேச நாடுகளும் ஈரானைப் புறக்கணிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறது.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் முடிவால் உலகளாவிய அளவில் தங்கள் நாட்டின் மீதான நன்மதிப்புப் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தெரிவித்தார்.

சில இடங்களில் ஈரான் இரகசியமாக அணு உலைகளை அமைத்து வருவதாக அமெரிக்க உளவுத்துறை குற்றம் சாட்டுகிறது. இந்த விவகாரத்தால் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தனது போர்க் கப்பலை வளைகுடா நோக்கி அனுப்பியுள்ள அமெரிக்கா, வளைகுடாவிலுள்ள தனது நேச நாடான சவூதிக்கு பெருமளவிலான ஆயுதங்களை வழங்கி வருகிறது.

அமெரிக்காவுக்குத் தக்க பதிலடி வழங்கப்படும் என்று ஈரான் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இந்த நிலை யில் அமைதியான முறையில் ஆக்கபூர்வமான தேவைகளுக்கு யூரேனியத்தைச் செறிவூட்டும் உரிமை ஈரானுக்கு உள்ளதாக தெரிவித்த ரவுகானி, "அமெரிக்காவின் அழுத்தத்துக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம்.

எங்கள் நாட்டின் சுதந்திரத்தையும், இஸ்லாமிய நன்முறைகளையும் பாதுக்காக்க ஒருநாளும் தவற மாட்டோம்" எனக் குறிப்பிட்டுத் தமது உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதைத் தவிர்த்து நாட்டு மக்களே இந்த விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.



## யூதர்கள் குல்லா அணியத் தடை

### ஜேர்மனி ஆணையாளர் அதிரடி

பெர்லின்,மே 28

பொது இடங்களில் யூதர்கள் தங்களுக்கே உரிய 'கிப்பா' எனப்படும் குல்லாவை அணிய வேண்டாம் என்று ஜேர்மனியில் யூத எதிர்ப்பைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட 'ஆண்டி செமிடிசிசம்' என்கிற அமைப்பின் ஆணையாளரான பெலிக்ஸ் க்லைன் என்பவர் கேட்டுக் கொண்டார்.

யூதர்களுக்கு எதிரான குற்றங்கள், சம்பவங்கள் ஜேர்மனியில் அதிகரித்து வருவதை அடுத்தே அவர் யூதர்கள் தம்மைத் தனித்து அடையாளப்படுத்திக் காண்பிக்கும் குல்லாவை அணிய வேண்டாம் என்று வலியுறுத்தி உள்ளார். மீண்டும் ஜேர்மன் மண்ணில் யூதர்கள் பாதுகாப்பாக இல்லை என்பதையே பெலிக்ஸ் க்லைனின் பேச்சுக் குறிப்பிடுவதாக இஸ்ரேலின் அதிபர் றியூவின் ரிவ்லின் கூறினார்.

## கருவழிப்பு கொலைக்குச் சமம் போப் பிரான்சிஸ் வேதனை

வோஷிங்டன்,மே 28

அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் வத்திக்கான் சார்பில் கருக்கலைப்புக்கு எதிரான மாநாடு ஒன்று நடந்தது. அதில் போப் பிரான்சிஸ் பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர், "கருக்கலைப்பு விவகாரம் ஒரு மதரீதியான பிரச்சினையல்ல, மாறாக மனிதாபிமான பிரச்சினை" என்றார்.



உயிரைப் பறிப்பது சட்டப்பூர்வமானதா? என்று கேள்வி எழுப்பிய அவர், கருவில் உள்ள குழந்தையை அழிப்பது கூலிப்படையை ஏவிக் கொலை செய்வதற்குச் சமம் என்று வேதனை தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், "கரு சரியாக வளரவில்லை என்பதால் கருக்கலைப்புச் செய்வதை ஏற்கமுடியாது. அது மனிநேயமற்ற செயல். மிகவும் பலவீனமான முறையில் குழந்தைகள் பிறந்தாலும் பரவாயில்லை. குழந்தைகளை வரவேற்போம்" என்றார்.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் கருக்கலைப்புத் தடைச் சட்டம் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண் உரிமை ஆர்வலர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தச் சட்டத்தை நீக்குமாறு அங்குள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்தச் சூழலிலேயே போப் பிரான்சிஸ் அமெரிக்கா மண்ணில் இவ்வாறு கருத்துரைத்துள்ளார்.



## இந்தியத் தலைமை அமைச்சருக்கு பாக். தலைமை அமைச்சர் வாழ்த்து

இஸ்லாமாபாத்,மே 28

இந்தியாவின் தலைமை அமைச்சராக இரண்டாவது முறையாகப் பதவியேற்கவிருக்கிற மோடிக்குப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்தியத் தேர்தல் நடப்பதற்கு முன்னரே புதிதாக அமையும் ஆட்சியிலாவது பாகிஸ்தான் - இந்தியா இடையிலான அமைதி பேச்சுக்கு நல்ல வாய்ப்பு அமையும் என்றுதான் நம்புவதாக இம்ரான் கான் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் நாட்டின் புதிய தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து இம்ரான் கான் இந்தியாவுடனான சமரசப் போக்கை வேண்டி நிற்பதில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானின் புதிய மன்னரையும் சந்தித்தார் ட்ரம்ப்

டோக்கியோ,மே 28

நான்கு நாள்கள் ஜப்பானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஜப்பான் மன்னர் நாருஹிட்டோவையும் சந்தித்தார். ஜப்பானுக்குச் சென்ற அவரை ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சோ அபே வரவேற்றார். பெரு வரவேற்புடன் விருந்துபசாரமும் செய்தார்.

அதன்பின்னர் ட்ரம்ப் ஜப்பானின் புதிய மன்னரான நாருஹிட்டோவைச் சந்தித்தார். ஜப்பானின் புதிய மன்னரைச் சந்தித்த முதல் வெளிநாட்டுப் பிரமுகர் என்ற சிறப்பை ட்ரம்ப் பெற்றார். இந்தப் பயணத்தில் ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சோ அபேவுடன் வடகொரியா விவகாரம் மற்றும் அமெரிக்கா ஜப்பான் இடையிலான இறக்குமதி, வரிவிதிப்புகள் தொடர்பாக ட்ரம்ப் விரிவாக விவாதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## மன்னாரில்...

கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பினரின் வழமையான சோதனை நடவடிக்கைக்யின்போது கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பேசாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் கடற்படையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த 22ஆம் திகதி கடற்படையினர் வழங்கிய தகவலுக்கு அமைய இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மதவாச்சியில் கார் ஒன்றில் இருந்து 12 கிலோ கஞ்ஞாவைக் கைப்பற்றியிருந்தனர். கடந்த 25ஆம் திகதி வெற்றிலைக்கேணியில் இருந்து 233 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தது. (எ-7)

## வடக்கு...

ரூபா ஒதுக்கப்பட்டு, திட்டங்களை இரு ஆண்டுகள் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 2019 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

"பனை நிதிய" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நிதியத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிதியத்தை ஆரம்பித்தார். ஆரம்ப நிகழ்வில் அமைச்சர்களான மங்கள சமரவீர, விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அமைச்சின் செயலர்கள், மாவட்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.

இந்த நிதியம் வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும், எதிர்காலத்தில் புலம்பெயர்ந்தோர் நிதியை நேரடியாக இந்த நிதியத்துக்குக் கொடுக்கும் வகையிலான ஏற்பாடுகளும் உள்ளன என்று தெரியவிக்கப்படுகின்றது. (எ-105,22)

## குருநாகல்...

நியமிக்கப்பட வுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இந்தக் குழு விசாரணைகளை மேற்கொண்டு விசாரணை அறிக்கையை அமைச்சரிடம் விரைவில் கையளிக்கும் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, அந்த மருத்துவருக்கு எதிராகப் பலரும் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுவரையில் சுமார் 16 பெண்கள் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்று மருத்துவமனை நிர்வாகத்தை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முறைப்பாடுகளை மேற்கொண்டவர்கள் குருணாநாகல், வாரியபொல, கலீவெல, தம்புள்ள, மவதகம, மெல்சிரிபுரா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் தமது முன்றப்பாட்டில், திருமணம் முடித்த தாங்கள் குறுகிய காலத்துக்குள் கர்ப்பம் தரித்தோம். குருநாகல் போதனா மருத்துவமனையில் சத்திரசிகிச்சை மூலமாக முதலாவது குழந்தையைப் பெற்றுக்கொண்டபோதும், இன்று வரையிலும் மீண்டும் கர்ப்பம் தரிக்கவில்லை. மீண்டும் கர்ப்பம் தரிக்காதவகையில், சத்திர சிகிச்சையேதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகமும் மேலதிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சர்ச்சைக்குரிய மருத்துவர் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## 22,000...

யில் இணைத்துக்கொள்வதற்கான திட்டம் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதி வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சால் ஆள்களை இணைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்காக நிதி அமைச்சு வழங்கும் ஊக்குவிப்பு நிதி தொடர்பாக அமைச்சர் விரைவில் அறிவிக்கவுள்ளார் - என்றார். (எ)

## உல்லாச...

திட்டம் தேசிய காப்புறுதி நிதியத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் நாட்டில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் உயிரிழந்திருந்தனர். அதையடுத்து நாட்டின் சுற்றுலாத்துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையை மீண்டெடுக்கும் நோக்குடன் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது இந்தக் காப்புறுதித் திட்டம் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது. (எ)

## சமூக ...

சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னர் இடம்பெற்ற சம்பவங்களைத் தற்போது இடம்பெற்றன போன்று சமூக வலைத்தளங்களில் பதிவிடுவோர் தொடர்பாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இனங்களுக்கு இடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ)

## தாக்குதலில்...

உயிரிழந்தவர்களின் 153 குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களில் 186 பேருக்கும் முழுமையான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 129 மில்லியன் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 20 மில்லியன் ரூபாவும் இதுவரை இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களுக்கு அவர்களின் மருத்துவ அறிக்கையின்படி இழப்பீடு தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்களில் இழப்பீடுகள் வழங்க வேண்டியவர்கள் தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அவை விரைவில் நிறைவு செய்யப்படும் என்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)

## ஞானசாரர்...

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் நீதி கோரும்போது பிரச்சினைகள் ஏற்படும். கடந்த காலங்களில் ஞானசார தேரர் கடுமையான முறையில் பிற இனங்கள் மீது இனவாத கருத்துக்களை பகிரங்கமாக கட்டவிழ்த்து விட்டார். அதனால் பல விளைவுகள் ஏற்பட்டன. அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் சிறைவாசம் அனுபவித்த ஞானசார தேரரை எவரும் எதிர்பாராத விதத்தில் பொதுமன்னிப்பு வழங்கியமை வருந்தத்தக்கது. அரசதலைவருக்கு அரசமைப்பின்படி பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் காணப்படலாம். ஆனால் அதை முறையாக செயற்படுத்தியிருக்க வேண்டும் இவரது விடுதலையைத் தொடர்ந்து மறுபுறம் பாதிக்கப்பட்டவர்கள் நீதித்துறையினை நாடும் போது பிரச்சினைகளே ஏற்படும் - என்றார். (எ)

## தமிழர்களை...

கொழும்பு, மே 28

கொடூர போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அபிவிருத்தியையும், அரசியல் தீர்வையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இந்த இரண்டு கருமங்களும் தடங்கலின்றி நிறைவேற வேண்டும். தமிழர்களை அரசு இனிமேலும் ஏமாற்றக்கூடாது. வழங்கிய வாக்குறுதிகளை உடன் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சிறப்பு அபிவிருத்தித் திட்டமான பனை நிதியத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அபிவிருத்தியையும், அரசியல் தீர்வையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அவை இரண்டையும் நிறைவேற்ற வேண்டும். அபிருவித்தியைக் காட்டித் தீர்வைப் பின்தள்ள முயற்சிக்கக் கூடாது என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நிகழ்வில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது,

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்காகப் பனை அபிவிருத்தி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமகால அரசு நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு மிகுந்த பொறுப்புடன் செயற்படுகின்றது. வரவு - செலவுத்திட்டத்தில் பனை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக உரிய வகையில் செலவு செய்யப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அபிவிருத்திக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைவாக இந்த நிதியம் ஏற்படுத்தப்பட்டது. அபிவிருத்திக்குத் தேவையான நிதியை இந்த நிதியத்தினூடாக வழங்குவதற்கு உரிமை இருக்கின்றது.

இந்த நிதியத்தின் மூலம் வடக்கு, கிழக்கில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட அபிவிருத்தி செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்கள் ஆகும். இந்த மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்காக நாம் இந்த நிதியத்தை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாக அந்த மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதி அமைச்சர் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் இந்தப் பனை அபிவிருத்தி நிதியத்துக்கு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தார்.

அந்தந்த மாகாணங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அபிவிருத்திக்காகத் தத்தமது பரிந்துரைகளை சமர்ப்பிக்கும்போது அவற்றுக்கு அமைவாக அதற்கான நிதியை இந்த நிதியத்தின் ஊடாக வழங்க முடியும். இந்த நிதியத்துக்கு மேலதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக கிராம எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழும் நிதியை நாம் வழங்குவோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சேதமடைந்த வீடுகளின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதேபோன்று என்டர் பிரைஸ் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழும் நிதி வழங்கப்படும் - என்றார். (எ-22)

## புலிகள்...

நீதிபதி சங்கீத சிங்ரா செகல் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை கடந்த 14ஆம் திகதி முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு இந்திய மத்திய அரசு நீடித்திருந்தது. சட்டவிரோத நடவடிக்கைகள் சட்ட விதிமுறைகளின் கீழ் இந்தத் தடை நீடிக்கப்பட்டிருந்தது.

இராணுவ ரீதியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டபோதும், விடுதலைப் புலிகள் இயக்கம் தனி ஈழம் என்ற கொள்கையைக் கைவிடவில்லை என்றும், நிதி திரட்டுதல், பரப்புரைப் பணிகள் மூலம் தமது கொள்கைக்காக இரகசியமாக இயங்குகின்றது என்றும் தடை நீடிப்பு இந்திய அரசு காரணம் கூறியிருந்தது. (எ)

## நீராவியடிப்...

செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தின் மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது. மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் பல சட்டத்தரணிகள் மனுதாரர் சார்பில் முன்னிலையாகினர். மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, நேற்றுமுன்தினம் வழிபாடு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரமான பெயர்பலகை நாட்டலுக்கு சென்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதை மூத்த சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் சுட்டிக்காட்டினார்.

மாவட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரியை மன்று அழைத்தது. அவர் வரும்வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி மன்றுக்கு வந்தார். வழக்கு ஆரம்பமானது. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பெயர்ப்பலகை நாட்ட சென்றவர்களுக்குப் பிக்கு, பொலிஸாரால் இடையூறு செய்யப்பட்டது. நீதிமன்ற உத்தரவை மீறி அங்கு தூண் அமைக்கப்பட்டு பாதுகாப்புக் கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டுள்ளது. ஆலயத்தின் பெயரை கணதேவி தேவாலயமென மாற்றம் செய்யப்பட்டுள்ளதை, மாற்றி நீராவியடி பிள்ளையார் ஆலயமென மாற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதை செய்வதற்கு நேற்று முன்தினம் தடையேற்படுத்தப்பட்டது. இதனால் இந்த இரண்டு விடயங்களிலும் நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பை நடைமுறைப்படுத்த உத்தரவிட வேண்டுமென மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் சமர்ப்பணம் செய்தார்.

இதையடுத்து, பாதுகாப்புக் கண்காணிப்புக் கமரா பொருத்த யார் அனுமதித்தது? என்று முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் நீதிமன்றம் வினவியது. அத்துடன், உடனடியாக அதை அகற்றும்படி உத்தரவிட்டது. நேற்றையதினமே அது அகற்றப்படும் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். அத்துடன், கணதேவி தேவாலயம் என்ற பெயரையும் மாற்றி, நீராவியடி பிள்ளையார் ஆலயமென மாற்றும்படி நீதிவான் உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவு ஏற்கனவே உள்ள நிலையில் அதற்கு கட்டுப்படாதவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று நீதிவான் எச்சரித்தார். வழக்கை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-21)

## அவசரகாலச்......

அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்புத் துறையினரும் புலனாய்வுத் துறையினரும் மேற்கொண்ட வெற்றிகரமான நடவடிக்கைகளே நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு காரணமாகும். நாட்டின் பாதுகாப்புத் துறையினருக்கு வெளிநாட்டு புலனாய்வுத் துறையினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவிகளையும் இதன்போது அரச தலைவர் பாராட்டினார்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஜேர்மன், ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தேசிய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இந்த அனைத்து நாடுகளும் வழங்கிய ஒத்துழைப்பையும் பொருளாதார அபிவிருத்திக்கான உதவியையும் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட அரச தலைவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சுற்றுலா பயணிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை விரைவில் நீக்குவதற்கு உதவுமாறும் தூதுவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலமை குறித்து விளக்கமளித்தமைக்காக இதன்போது அரச தலைவருக்கு நன்றி தெரிவித்த தூதுவர்கள், இலங்கைக்கு வருகை தருவதற்கு தமது நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விரைவில்நீக்குவதற்குதேவையானமுன்னெடுப்புக்களைச் செய்வதாக உறுதியளித்தனர்.

இதேநேரம் அவசரகால சட்டம் நீடிக்கப்பட்டிருப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், பாதுகாப்பு துறையின் வெற்றிகரமான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளபோதிலும் மீண்டும் அவசரகால சட்டத்தை நீடிக்கும் தேவை ஏற்படாது என்று தான் நம்புவதாகவும் அரச தலைவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அரச தலைவர், நபர்கள், வெடிபொருள்கள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பது குறித்தும் விளக்கினார்.

மேலும் இத்தகைய கொடூர தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு பாதுகாப்புத் துறையில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புதிய சட்டங்கள் வகுக்கப்படுவதுடன், நிறுவனக் கட்டமைப்பொன்றை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரச தலைவர் குறிப்பிட்டார். (ஒ,5)

## வதந்திகளை நம்ப வேண்டாம் ஜெயசூர்யா வேண்டுகோள்

இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூர்யா இறந்து விட்டதாக வாட்ஸ்அப்பில் பரவிய செய்தியை பார்த்து சுழற் பந்து வீச்சாளர் அஸ்வின் கவலையடைந்துள்ளார்.

1996ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூர்யா தான் முக்கிய காரணமாக இருந்தார். பவர்பிளே என்றாலே ரசிகர்களுக்கு [illegible]னைவுக்கு வருவது ஜெயசூர்யதான்.

[illegible]யதாகும் இவர் கனடாவில் நடந்த கார் விபத்தில் இறந்து விட்டதாக வாட்ஸ்அப்பில் செய்தி பரவியது. இது கிரிக்கெட் வீரர்களை க[illegible]லைக்குள்ளாக்கியது. பின்னர் இந்த செய்தி வதந்தி எனத் தெரியவந்தது.

இந்த நிலையில் அஸ்வின் இந்த வதந்தி செய்தி குறித்து மிகவும் கவலையடைந்தார்.

இது குறித்து அஸ்வின் தனது கீச்சகத்தில் குறிப்பிடுகையில்;

இந்தச் செய்தி உண்மையா? எனக்கு வாட்ஸ் அப் மூலம் தகவல் வந்தது. ஆனால்,கீச்சகத்தில் இதுபோன்ற செய்தியை நான் பார்க்கவில்லை" என்று தெரிவித்தார். பின்னர் அஸ்வினுக்கு ஒருவர் அது வதந்தி என பதில் அளித்தார்.

இந்தச் செய்தி குறித்து ஜெயசூரியா தெரிவிக்கையில்; எனது உடல் ஆரோக்கியம் குறித்து சில வலைத்தளங்கள் பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றன. கார் விபத்தில் நான் இறந்து விட்டதாக கூறப்படும் செய்தியை புறக்கணியுங்கள். நான் கனடாவுக்கு செல்லவில்லை. இலங்கையில்தான் இருக்கிறேன்- என்றார்.



# கே.ஸி.ஸி.ஸி. சம்பியன்

யாழ்ப்பாணம், மே 28

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 32.4 பந்துப் மாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரஜீந்தன் 36 ஓட்டங்களையும், சுரேஷன் 30 ஓட்டங்களையும், றொகான் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நிருசிகன் 7 இலக்குகளையும், கஜனன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

136 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 25.3 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. [illegible]பட்சமாக பானுசன் 39 ஓட்ட[illegible]ம். யனதுர்ஸ 32 ஓட்ட[illegible]ரதாபன் 13 ஓட்டங்களையு[illegible]னர்.

பந்துவீச்சில் சிவராஜ் [illegible] இலக்குகளையும், றொசான் 2 இல[illegible]குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் கே.ஸி.ஸி.ஸி அணியின் வீரர் நிருசிகன் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரனாக கே.ஸி.ஸி.ஸி அணியின் பானுசன் தெரிவானார்.

சிறந்த களத்தடுப்பாளராக திரு நெல்வேலி அணியின் அசோக்காந் தெரிவானார். (ம-23)







## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 28

**பருத்தித்துறை விளையாட்டு விழா**

பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் ந.உமாசுதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வலைப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், கயிறு இழுத்தல் என்பனவற்றின் இறுதிப் போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன. வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் நக்கீரன் இளைஞர் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய இளைஞர் கழக அணி மோதவுள்ளது. கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பொலிகை பாரதி இளைஞர் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் இளைஞர் கழக அணி மோதவுள்ளது. ஆண்களுக்கான கயிறு இழுத்தல் இறுதிப் போட்டியில் சிவானந்தா இளைஞர்கழக அணியை எதிர்த்து அருணோதயா இளைஞர் கழக அணி மோதவுள்ளது.

பெண்களுக்கான கயிறு இழுத்தல் இறுதிப் போட்டியில் நக்கீரன் இளைஞர்கழகஅணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் கழக அணி மோதவுள்ளது.

**டயமன்ஸின் கால்பந்தாட்டம்**

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்;கு 9 வீரர்கள் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துகான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுடர்ஒளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சக்தி வேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## தென்மராட்சி கல்வி வலய போட்டிகள்



தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலய நிலை மெய்வன்மைப் போட்டிகள் இன்று தொடக்கம் 31ஆம் திகதி வரை வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறமென வலயக் கல்விப் பணிகப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

மாணவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு பாடசாலை நேரத்தில் (காலை 8.30 மணி தொடக்கம் பகல் 1.30 மணி வரை) போட்டிகள் நடத்தப்படவுள்ளதால் பாடசாலைகள் ஒத்துழைப்பினை நல்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-9)

## சைனிங்ஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 28

வல்வை விளையாட்டுக் கழகம் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் சைனிங்ஸ் அணி கிண்ணம் வென்றது.

வல்வை தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துறெயின்போவிளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் எதுவித கோலையும் பதிவு செய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமனிலைத் தகர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆட்டநாயகனாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணியின் செந்தூரன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக அதே அணியின் பிரசாந் தெரிவானர். சிறந்த கோல்காப்பாளரக சைனிங்ஸ் அணியின் அபிநயன் தெரிவானர். தொடரின் சிறந்த பின்கள வீரராக றெயின்போ அணியின் பிரகாஸ் தெரிவானார். (ம-23)



## இந்திய அணியை வீழ்த்துவோம்

ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியை வீழ்த்தி தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தேர்வுக்குழு தலைவருமான இன்ஷமாம் உல்ஹக் கூளுரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிரிக்கெட்டில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியை காண்பதற்காக ரசிகர்கள் மிக ஆர்வமாகவுள்ளனர். உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே மகிழ்ச்சி அடைவோம் என்று கூட பாகிஸ்தான் ரசிகர்கள் சிலர் சொல்கிறார்கள்.


உலகக்கிண்ணப்போட்டியில் நாங்கள் இதுவரை இந்தியாவை வென்றதில்லை. அந்தச் சோகத்தை இந்த உலக்க் கிண்ணத்தில் தகர்ப்போம் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டம் மட்டுமல்ல, எல்லா ஆட்டங்களும் எங்களுக்கு முக்கியம்தான். எல்லா அணிகளையும் வீழ்த்தக்கூடிய திறமை எங்கள் அணியினரிடம் உள்ளது - என்றார்.

நாளைமறுதினம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி எதிர்வரும் 16 ஆம் திகதி பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.







### பிரென்ஞ் பகிரங்க ரென்னிஸ்

# முருகுஸா, நடால் முன்னேற்றம்

பிரென்ஞ் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று போட்டியில் ரோஜர் பெடரர் இத்தாலி வீரர் சோனேகோவை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரென்ஞ் பகிரங்க ரென்னிஸ் தொடர் நேற்றுமுன்தினம் பாரிஸில் ஆரம்பமானது.

'களிமண் தரை' போட்டியான இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 3 ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இத்தாலியைச் சேர்ந்த லோரென்ஜா சோனிகோவை சந்தித்தார்.

இதில் பெடரர் 6:2, 6:4, 6:4 என்ற செற் கணக்கில் சோனிகோவை இலகுவாக வீழ்த்தி இரண்டாம் சுற்று முன்னேறினார்.

இதேவேளை, பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், ஜேர்மன் வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் 4:6, 2:6 என்ற செற் கணக்கில், ரஷ்ய வீராங்கனை அனஸ்தாஸியா போடபோவாவிடம் தோல்வியடைந்தார்.

இன்னுமோர் ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருஸா, 5:7, 6:2, 6:2 என்ற செற் கணக்கில், அமெரிக்க வீராங்கனை டெய்லர் டவுன்செண்டை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

# பயிற்சி ஆட்டத் தோல்வி அச்சப்படத் தேவையில்லை

### ஜடேஜா தெரிவிப்பு

உலகக் கிண்ணப் போட்டிகள் நாளைமறுதினம் ஆரம்பமாகின்றது. இதற்கான பயிற்சி ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியைத் தழுவியது.

இந்த ஆட்டத்தில் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பியமையே தோல்விக்குக் காரணம் என்று அந்தப் போட்டியில் அரைச் சதம் அடித்த ரவீந்திர ஜடேஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இங்கிலாந்து பயணத்தில் இதுதான் எங்களது முதல் ஆட்டம். ஒரு மோசமான இன்னிங்சை வைத்து வீரர்களின் திறமையை எடைபோட்டு விடக்கூடாது. இது ஒரு மோசமான ஆட்டமாக அமைந்தது அவ்வளவுதான். இதனை வைத்துக்கொண்டு இந்திய அணியின் துடுப்பாட்டம் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அதுவும் துடுப்பாட்டத்துக்கு உகந்த ஆடுகளங்களில் இந்திய அணி விளையாடி விட்டு இங்கிலாந்துக்கு வந்து விளையாடுவது கடினமாகத்தான் இருக்கும்.

தவறுகளை திருத்திக்கொள்ள நமக்கு இன்னும் காலஅவகாசம் உள்ளது. துடுப்பாட்டத் திறமையை மேம்படுத்திக்கொள்ள இன்னும் கடினமாக உழைப்போம். எல்லோரிடமும் அனுபவம் உள்ளது. அதனால் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இது வழக்கமான இங்கிலாந்து ஆடுகளங்கள் போன்று இருந்தது. ஆடுகளத்தன்மை தொடக்கத்தில் மிருதுவாகக் காணப்பட்டது. போகப் போக நன்றாக இருந்தது. ஆனால் உலகக் கிண்ணத் தொடரின்போது இவ்வளவு அதிகமான புற்கள் உள்ள ஆடுகளங்களை கொடுக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்- என்றார். இதற்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சினும் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் சபையின் கோரிக்கையை நிராகரித்த மகேல

நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு இலங்கை அணிக்காக ஏதாவது வகையில் பங்களிப்பை மேற்கொள்ள வருமாறு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை விடுத்த அழைப்பை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்தன நிராகரித்தார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியின் தலைமைப் பயிற்சியாளராகவிருந்து அணியை சிறப்பாக வழிநடத்தி கிண்ணத்தை பெற்றுக் கொடுத்தார்.

இந்த நிலையில் இலங்கையின் கிரிக்கெட்டை துறையை மேம்படுத்த மகேல ஜெயவர்த்தன, சங்கக்கார உள்ளிட்டோர் சமர்ப்பித்த அறிக்கையை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கருத்திற்கொள்ளாது தன்னிச்சையாக செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனால் அதிருப்தியில் இருந்த ஜெயவர்த்தன, உலகக் கிண்ணத் தொடருக்கு ஏதாவது வகையில் பங்களிப்பை ஆற்ற வருமாறு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை விடுத்த அழைப்பை தட்டிக்கழித்துள்ளார்.



## விதிமுறைகளை மீறும் துடுப்பாட்ட வீரர்களுக்கு தண்டனை வேண்டும்

### சச்சின் ஆதங்கம்

கிரிக்கெட்டில் விதிமுறைகளை மீறும் துடுப்பாட்ட வீரர்களுக்கு தண்டனை விதிக்கும் வகையில் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் புதிய யோசனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒரு துடுப்பாட்ட வீரர் இறுதிப் பந்தில் ஓட்டம் எடுத்தால் அடுத்த பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தில் அவர்தான் துடுப்பெடுத்தாட வேண்டும். இது தெரிந்திருந்தும் எதிர் முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் துடுப்பெடுத்தாட அனுமதிக்கிறார். இது அப்பட்டமான விதிமுறை மீறல் இதுபோன்ற விதிமுறைகளுக்கு பன்னாட்டளவில் தண்டனையை உடனடியாகக் கொண்டு வர வேண்டும். 40 யார்ட் வட்டத்துக்குள் 3 களத்தடுப்பாளர்கள் இருக்க வேண்டும் ஆனால், 4 களத்தடுப்பாளர்கள் இருந்ததை நடுவர் கண்டுபிடித்தால் உடனே முறையற்ற பந்து வீச்சு என்று அறிவிக்கின்றனர். இந்த நேரத்தில் களத்தடுப்பில் ஈடுபடும் அணிக்கு தண்டனை கிடைக்கிறது. துடுப்பெடுத்தாடும்அணிக்கு அது சாதகமாக அமைந்து விடுகிறது.

ஆனால், துடுப்பாட்ட வீரர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட எல்லையில் நிற்காமல் மாறி நின்றாலும் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படாமல் அப்போதும் முறையற்ற பந்து வீச்சு என்று அறிவிக்கப்படுவதில் என்ன நியாயம். விதிமுறை மீறல்களுக்கு துடுப்பாட்ட வீரர்கள் தண்டிக்கப்பட வேண்டும். விதிமுறைகளை மீறும் துடுப்பாட்ட வீரர்களுக்கு அவர்கள் சேர்த்த ஓட்டங்களிலிருந்து 7 ஓட்டங்களைக் குறைக்க வேண்டும். அல்லது பந்துவீசும் அணிக்கு 7 ஓட்டங்களை வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் களத்தில் இருக்கும் நடுவர்கள் தங்கள் பணியைச் சரியாகச் செய்ய வேண்டும் - என்றார்.

## பாகிஸ்தானின் கோக்லி பாபர் அசாம்

பாகிஸ்தான் அணி வீரர் பாபர் அசாம் குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் தெரிவித்தாவது;

பாகிஸ்தானைச் சேர்ந்த பாபர் ஆசமின் துடுப்பாட்டம் மிகவும் அபாரமாக உள்ளது. அவர் சிறந்த வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் பாகிஸ்தான் அணியின் விராட் கோக்லி ஆவார். பாகிஸ்தான் அணி உலகக்கிண்ண அரையிறுதி அல்லது இறுதிப் போட்டிக்கு முன்னேற வேண்டுமானால் இளம் வீரர்கள் பொறுப்புடன் ஆட வேண்டும் - என்றார்.

பாபர் ஆசம் ரி/20 போட்டியில் அதிவேக ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பார்சிலோனா பரிதாபம் கிண்ணம் வலன்சியாவிடம்

**கடை வாடகைக்கு**

யாழ்.நகர் ஆரியகுளச் சந்தியில் உணவகம் நடத்திய கடை வாடகைக்குண்டு.
சகல வியாபாரங்களுக்கும் ஏற்றது.
முற்பணம் - 600000/=
மாதவாடகை - 25,000/=
071 110 0066

ஸ்பானிய கழகங்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோபா டெல்றே இறுதிப் போட்டியில் வலன்சியா அணி 2:1



என்ற கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

வலன்சியா - பார்சிலோனா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் வலன்சியா அணி வீரர் கெவின் கமிரோ முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஆட்டத்தின் 33ஆவது நிமிடத்தில் அதே அணியின் வீரர் றொட்றிகோ ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் வலன்சியா அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை யிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் பார்சிலோனா அணி வீரர்கள் அதிரடியாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 73ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் மெஸ்ஸி ஒரு கோலைப் போட அணி உற்சகமடைந்தது. எப்பிடியாவது இன்னொரு கோலைப் போட்டு விட வேண்டும் என்று பார்சிலோனா அணி வீரர்கள் முண்டியடித்து விளையாடினர். எனினும் ஆட்டத்தின் இறுதி வரை இரு அணிகளாலும் வேறு கோல்களைப் பெற முடியாது போக வலன்சியா அணி 2:1 என்ற கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**கருத்தரங்கு**

வருமானப்பரிசோதகர்
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைகளுக்கானது
29/5.31/05.புதன்,வெள்ளி3.00 pm - 6.00pm
சனி1/6 9.00am - 2.00pm
P.கமலதாசன் மற்றும் வளவாளர்கள்
நாவலர் கல்விநிறுவனம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 111 6739

**விசேட வகுப்புக்கள்**

வருமானப் பரிசோதகர்
முகாமைத்துவ உதவியாளர்
மாலைநேர வகுப்பு
இன்று செவ்வாய் புதன், வியாழன்
பி.ப4.00 - 6.00
076 688 3394.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரிவீதியில் பஸ்நிலையத்திலிருந்து 60m தூரத்தில்)

# VACANCY @ BLC Campus Jaffna



Seeks suitable candidate to following Vacancies

**1. Receptionist (Female)**
- Should have a pleasant and outgoing personality
- Should have good English Speaking skills and good communication skills.
- Willing to work as team member
- Should have very good interpersonal and public relation skills.
- Experience in a similer position would be an added advantage

**2. Marketing Excecutive**
- Recruitment of student to college
- Processing aplications, Facilitating admission & Student enrolment.
- Implimenting marketing stretagies to promote the college
- Developing and maintaning relationships with career advisors of schools & institutes engaging with prospective with students.
- Participate in recruitment activities such as education exhibition open days & information sessions.
- Assiting with the development & implementation of subsequent sales and marketing plans
- Experience in a similar position would be an added advantage.
- Demonstrated success in achieving recruitment targets with a strong commitmant to excellence in customer service

**3. Admin Assistant**
- Dynamic multitasking candidate with good communication skills
- Should be fluent in both written and spoken English
- Previous work experience in a similar possion would be an added advantage
- Should be able to
  - Work independently
  - Handle office admin work
    work on MS office package, Internet & E mail.
  - Handling student, Lectures documents
  - Handling lecture scheduling & fallow up

Please send your CV to info@blccampus.edu.lk

BLC CAMPUS
23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## உலகக் கிண்ணத் தொடர் டிக்கெட் விற்பனை அமோகம்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது. இதில் 10 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதற்கான டிக்கெட்டை பன்னாட்டு கிரிக்கெட் சபை விற்பனை செய்து வருகிறது. ரசிகர்கள் எளிமையான வகையில் டிக்கெட்டுக்களை வாங்குவதற்கான வழிவகைகளை பன்னாட்டு கிரிக்கெட் சபை செய்து கொடுத்துள்ளது. அதன் விளைவாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட டிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதில், ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரசிகைகள் டிக்கெட்டுக்கள் வாங்கியுள்ளனர். டிக்கெட் வாங்கியவர்களில் ஒரு லட்சம் பேர் 16 வயதிற்குட்பட்டோர் என்றும் தெரிய வந்துள்ளது.

**சாரதி தேவை**

யாழ். நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சாரதி உடன் தேவை. 077 808 9913

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.